சுராவின்

# சமூக அறிவியல்

## 7 ஆம் வகுப்பு

முழு ஆண்டு கையேடு

தமிழ்நாடு அரசின் முப்பருவப் பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது.

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடப்பகுதியிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினா விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- அலகு தேர்வு வினாத்தாள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு வினாக்கள் ஒவ்வொரு பாடத்திலும் குறியீட்டுடன் ⊗ சுட்டிக் காட்டுப்பட்டுள்ளன.
- முதல் பருவத் தொகுத்தறித் தேர்வு, இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு மற்றும் மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு (SA) – 2024–25 வினாத்தாள்கள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact

80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 98409 26027

enquiry@surabooks.com    Ph: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : FY-7-SS-TM

எழுதி வழங்கியவர்
S. மதிவாணன், *M.A., M.Ed.*
சென்னை

**Our Guides for Std. VIII to X**

FULL YEAR GUIDES

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)

**Our Guides for Std. XI & XII**

GUIDES

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

8/05/2025

## பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் சமூக அறிவியல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 7ஆம் வகுப்பு – அறிவியல் – முழு ஆண்டு பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 7ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.
நலமே விளைக!

– பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பப்ளிகேஷன்ஸ்)



www.surabooks.com

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

## பொருளடக்கம்

### முதல் பருவம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 1 - 11 |
| 2. | வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 12 - 21 |
| 3. | தென்னிந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 22 - 30 |
| 4. | டெல்லி சுல்தானியம் | 31 - 38 |
| | **புவியியல்** | |
| 1. | புவியின் உள்ளமைப்பு | 39 - 49 |
| 2. | நிலத்தோற்றங்கள் | 50 - 58 |
| 3. | மக்கள் தொகையும், குடியிருப்புகளும் | 59 - 67 |
| | **குடிமையியல்** | |
| 1. | சமத்துவம் | 68 - 72 |
| 2. | அரசியல் கட்சிகள் | 73 - 79 |
| | **பொருளியல்** | |
| 1. | உற்பத்தி | 80 - 86 |
| முதல் பருவத் தொகுத்தறித் தேர்வு 2024-25 வினாத்தாள் விடைகளுடன் | | 87 - 90 |




www.surabooks.com

## இரண்டாம் பருவம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | விஜயநகர், பாமினி அரசுகள் | 93 - 102 |
| 2. | முகலாயப் பேரரசு | 103 - 112 |
| 3. | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | 113 - 122 |
| | **புவியியல்** | |
| 1. | வளங்கள் | 123 - 131 |
| 2. | சுற்றுலா | 132 - 140 |
| | **குடிமையியல்** | |
| 1. | மாநில அரசு | 141 - 148 |
| 2. | ஊடகமும் ஜனநாயகமும் | 149 - 154 |
| இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு 2024-25 வினாத்தாள் விடைகளுடன் | | 155 - 158 |






www.surabooks.com

## மூன்றாம் பருவம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 161 - 168 |
| 2. | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும் | 169 - 176 |
| 3. | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 177 - 185 |
| | **புவியியல்** | |
| 1. | கண்டங்களை ஆராய்தல் - வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | 186 - 198 |
| 2. | நிலவரைபடத்தை கற்றறிதல் | 199 - 207 |
| 3. | இயற்கை இடர்கள் - பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல் | 208 - 216 |
| | **குடிமையியல்** | |
| 1. | பெண்கள் மேம்பாடு | 217 - 223 |
| 2. | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 224 - 230 |
| 3. | சாலைப் பாதுகாப்பு | 231 - 236 |
| | **பொருளியல்** | |
| 1. | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 237 - 244 |
| | மூன்றாம் பருவத் தொகுத்தறி மதிப்பீடு (SA) - 2024 - 25 வினாத்தாள் விடைகளுடன் | 245 - 248 |

# பாடத்திட்டம்

| மாதம் | வரலாறு | புவியியல் | குடிமையியல் | பொருளியல் | மொத்த அலகுகள் |
|---|---|---|---|---|---|
| ஜூன் | 1 | 1 | 1 | 0 | 3 |
| ஜூலை | 1 | 1 | 0 | 1 | 3 |
| முதல் பருவ இடைத் தேர்வு (ஜூன், ஜூலை - 6 அலகுகள்) | | | | | |
| ஆகஸ்ட் | 1, 2 | 1 | 1 | 0 | 4 |
| செப்டம்பர் | 1 | 0 | 0 | 0 | 1 |
| முதல் பருவ தொகுத்தறித் தேர்வு (ஜூன் - செப்டம்பர் - 11 அலகுகள்) | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 1 | 1 | 1 | 0 | 3 |
| நவம்பர் | 2 | 2 | 2 | 0 | 3 |
| இரண்டாம் பருவ இடைத் தேர்வு (அக்டோபர், நவம்பர் - 6 அலகுகள்) | | | | | |
| டிசம்பர் | 3 | 0 | 0 | 0 | 1 |
| இரண்டாம் பருவ தொகுத்தறித் தேர்வு (அக்டோபர் - டிசம்பர் - 7 அலகுகள்) | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 1 | 1 | 0 | 3 |
| பிப்ரவரி | 2 | 2 | 0 | 0 | 2 |
| மூன்றாம் பருவ இடைத் தேர்வு (ஜனவரி, பிப்ரவரி - 5 அலகுகள்) | | | | | |
| மார்ச் | 3 | 3 | 2 | 1 | 4 |
| ஏப்ரல் | 0 | 0 | 3 | 1 | 2 |
| மூன்றாம் பருவ தொகுத்தறித் தேர்வு (ஜனவரி - மார்ச் - 10 அலகுகள்) | | | | | |



www.surabooks.com

7ஆம் வகுப்பு

# முதல் பருவம்

# சமூக அறிவியல்

www.surabooks.com

# சமூக அறிவியல்

| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| **வரலாறு** | | | |
| 1. | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 3 - 11 | ஜூன் |
| 2. | வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 12 - 21 | ஜூலை |
| 3. | தென்னிந்தியப் புதிய அரசுகள்<br>பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 22 - 30 | ஆகஸ்ட் |
| 4. | டெல்லி சுல்தானியம் | 31 - 38 | ஆகஸ்ட்-<br>செப்டம்பர் |
| **புவியியல்** | | | |
| 1. | புவியின் உள்ளமைப்பு | 39 - 49 | ஜூன் |
| 2. | நிலத்தோற்றங்கள் | 50 - 58 | ஜூலை |
| 3. | மக்கள் தொகையும், குடியிருப்புகளும் | 59 - 67 | ஆகஸ்ட் |
| **குடிமையியல்** | | | |
| 1. | சமத்துவம் | 68 - 72 | ஜூன் |
| 2. | அரசியல் கட்சிகள் | 73 - 79 | ஆகஸ்ட் |
| **பொருளியல்** | | | |
| 1. | உற்பத்தி | 80 - 86 | ஜூலை |

www.surabooks.com

வரலாறு

அலகு 1

# இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. **________ என்பவை பாறைகள், கற்கள், கோவில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.**
   அ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் ஆ) பயணக்குறிப்புகள்
   இ) நாணயங்கள் ஈ) பொறிப்புகள் **[விடை: ஈ) பொறிப்புகள்]**
2. **கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ________ ஆகும்.**
   அ) வேளாண்வகை ஆ) சாலபோகம்
   இ) பிரம்மதேயம் ஈ) தேவதானம் **[விடை: ஈ) தேவதானம்]**
3. **________ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.**
   அ) சோழர் ஆ) பாண்டியர்
   இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள் **[விடை: அ) சோழர்]**
4. **முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ________ ஆகும்.**
   அ) அயினி அக்பரி ஆ) தாஜ்-உல்-மா-அசிர்
   இ) தசுக்-இ-ஜாஹாங்கீரி ஈ) தாரிக்-இ-பெரிஷ்டா
   **[விடை: ஆ) தாஜ்-உல்-மா-அசிர்]**
5. **அரேபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ________ ஆவார்.**
   அ) மார்க்கோபோலோ ஆ) அல்-பரூனி
   இ) டோமிங்கோ பயஸ் ஈ) இபன் பதூதா **[விடை: ஈ) இபன் பதூதா]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ______ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது. **[விடை: உத்திரமேரூர்]**
2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் ________ ஆவார். **[விடை: முகமதுகோரி]**
3. ஒரு ________ என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது. **[விடை: ஜிட்டல்]**
4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் ________ ஆவார். **[விடை: மின்கஜ் உஸ் சிராஜ்]**
5. கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி ________ ஆவார். **[விடை: நிகோலோ கோண்டி]**

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | கஜுராகோ | ஒடிசா |
| 2. | கொனார்க் | ஹம்பி |
| 3. | தில்வாரா | மத்தியப்பிரதேசம் |
| 4. | விருப்பாக்சா | ராஜஸ்தான் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | கஜுராகோ | மத்தியப்பிரதேசம் |
| 2. | கொனார்க் | ஒடிசா |
| 3. | தில்வாரா | ராஜஸ்தான் |
| 4. | விருப்பாக்சா | ஹம்பி |


www.surabooks.com

## IV. சரியா? தவறா?

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும். **[விடை: சரி]**

2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன. **[விடை: தவறு]**

3. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன. **[விடை: சரி]**

4. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி.1522 இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார். **[விடை: தவறு]**

## V. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக (பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்)

1. **கூற்று : முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.**

   **காரணம் : இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.**

   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
   இ) கூற்று தவறு, காரணம் சரி.
   ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு. **[விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

2. **தவறான இணையைக் கண்டறியவும்.**

   1. மதுரா விஜயம் – கங்காதேவி
   2. அபுல் பாசல் – அயினி அக்பரி
   3. இபன் பதூதா – தாகுயூக்-இ-ஹிந்த்
   4. அமுக்தமால்யதா – கிருஷ்ணதேவராயர் **[விடை: 3) இபன் பதூதா - தாகுயூக்-இ-ஹிந்த்]**

3. **பொருந்தாததைக் கண்டுபிடி.**

   அ) பொறிப்புகள் ஆ) பயணக்குறிப்புகள்
   இ) நினைவுச் சின்னங்கள் ஈ) நாணயங்கள் **[விடை: (ஆ) பயணக்குறிப்புகள்]**

## VI. ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்.

1. **நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?**

**விடை:** நாதமுனி

2. **'தசுக்' எனும் வார்த்தையின் பொருள் யாது?**

**விடை:** சுயசரிதை

3. **ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் என்ன?**

**விடை:** தசுக்-இ-ஜாஹாங்கீரி

4. **வரலாற்றை அறிந்துகொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.**

**விடை:** 1. முதல் நிலைச் சான்றுகள்
2. இரண்டாம் நிலைச் சான்றுகள்

5. **இடைக்காலத்தில் கட்டப்பட்ட முக்கிய மசூதிகளையும். கோட்டைகளையும் பட்டியலிடவும்.**

**விடை:** முக்கிய மசூதிகள் :

1. குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி 2. மோத்-கி-மசூதி
3. ஜமா மசூதி 4. பதேப்பூர் சிக்ரி தர்கா



www.surabooks.com

**கோட்டைகள் :**

1. ஆக்ராகோட்டை
2. சித்தூர்கோட்டை
3. குவாலியர் கோட்டை
4. டெல்லி செங்கோட்டை
5. தௌலதாபாத் பிரோஷ் ஷா கொத்தளம் (டெல்லி)

**6. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த முக்கியமான அயல்நாட்டுப் பயணிகளின் பெயர்களைக் கூறவும்.**

விடை: **இந்தியாவிற்கு வருகை தந்த முக்கியமான அயல்நாட்டுப் பயணிகள் :**

1. மார்கோபோலோ
2. அல்-பரூனி
3. இபன் பதூதா
4. நிகோலோ கோண்டி
5. டோமிங்கோ பயஸ்

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்.

**1. டெல்லிசுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.**

விடை:
1. முகமது கோரி தான் வெளியிட்ட தங்க நாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமியின் வடிவத்தைப் பதிப்பித்துத் தனது பெயரையும் பொறிக்கச் செய்திருந்தார்.
2. டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்துகொள்ள 'ஜிட்டல்' என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.
3. இல்துமிஷ் அறிமுகம் செய்த 'டங்கா' எனப்படும் வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள் முகமதுபின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை பயன்பாட்டில் இருந்ததையும் நாட்டின் பொருளாதார வளம் அல்லது நலிவு ஆகியவற்றைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளன.
4. ஒரு ஜிட்டல் 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும். 48 ஜிட்டல்கள் 1 வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.

## VIII. கட்டக வினாக்கள் :

| | |
|---|---|
| 1. ________, பேரரசர் ஔரங்கசீப்பின் அரசவை அறிஞர் ஆவார். **[விடை: காஃபிகான்]** | 2. திருவாலங்காடு செப்பேடுகள் ________ காலத்தைச் சேர்ந்ததாகும். **[விடை: முதலாம் ராஜேந்திர சோழனின்]** |
| 3. ______ என்பது கல்விக் கூடங்களைப் பாராமரிப்பதற்கான நிலமாகும். **[விடை: சாலபோகம்]** | 4. பெரியபுராணத்தைத் தொகுத்தவர் ______ ஆவார். **[விடை: சேக்கிழார்]** |
| 5. ________ ஓர் அரேபியச் சொல். இதன் பொருள் 'வரலாறு' என்பதாகும். **[விடை: தாரிக் (அ) தாகுயூக்]** | 6. முகமதுபின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த ________க்கு மாற்றினார். **[விடை: தேவகிரி]** |

## IX. உயர் சிந்தனை வினா :

**1. 'நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக் காட்டுகிறது'. விளக்குக.**

விடை: **நாணயங்கள் :**

1. நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள படங்களும் உருவங்களும், அரசர்களுடைய பெயர்கள், பட்டங்கள், அவர்களின் உருவப்படங்கள், நிகழ்வுகள், இடங்களின் பெயர்கள், காலங்கள், அரசவம்சத்தின் பெயர்கள், அரச சின்னங்கள் ஆகியவற்றை நமக்கு உணர்த்துகின்றன.
2. நாணயங்களில் உள்ள உலோகக் கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்த செய்திகளை வழங்குகின்றன.



www.surabooks.com

3. அரசர்களின் இராணுவப் படையெடுப்புகள், பிரதேச விரிவாக்கம், வணிகத் தொடர்புகள், சமய நம்பிக்கைகள் போன்றவையும் நாணயங்களில் இடம்பெற்றுள்ளன.
4. முகமது கோரி தான் வெளியிட்ட தங்க நாணயத்தில் பெண் தெய்வமான இலட்சுமியின் வடிவத்தைப் பதிப்பித்துத் தனது பெயரையும் பொறிக்கச் செய்திருந்தார்.
5. டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தை அறிந்துகொள்ள 'ஜிட்டல்' என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.
6. இல்துமிஷ் அறிமுகம் செய்த 'டங்கா' எனப்படும் வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள், முகமதுபின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை பரவலான பயன்பாட்டில் இருந்ததையும் நாட்டின் பொருளாதார வளம் அல்லது நலிவு ஆகியவற்றைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளன.

**X. மாணவர் செயல்பாடு :**

**1. இடைக்கால இந்தியாவின் அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றின் படங்கள் அடங்கிய செருகேடு [ஆல்பம்] ஒன்றைத் தயார் செய்யவும்.**


ஹுமாயூன் கல்லறை


ஜமா மசூதி


ஆக்ரா கோட்டை


அம்பர் அரண்மனை

## கூடுதல் வினாக்கள்

**I சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

**1. தொடக்க இடைக்கால இந்திய வரலாற்றின் காலம் ________.**

அ) கி.பி. 700 முதல் 1200 வரை ஆ) கி.பி. 1200 முதல் 1700 வரை
இ) கி.பி. 900 முதல் 1200 வரை ஈ) கி.பி. 1200 முதல் 1900 வரை

**[விடை: அ) கி.பி. 700 முதல் 1200 வரை]**

**2. சான்றுகள் ________ வகைப்படும்.**

அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

**[விடை: ஆ) இரண்டு]**

**3. பொறிப்புகள், நினைவுச்சின்னங்கள், நாணயங்கள் ஆகியவை ________ சான்றுகள் ஆகும்.**

அ) மூன்றாம் நிலைச் சான்றுகள் ஆ) இரண்டாம் நிலைச் சான்றுகள்
இ) முதல் நிலைச் சான்றுகள் ஈ) நான்காம் நிலைச் சான்றுகள்

**[விடை: இ) முதல் நிலைச் சான்றுகள்]**

**4. கீதகோவிந்தம் என்ற நூலை எழுதியவர் ________.**

அ) ஜெயதேவர் ஆ) அப்பர்
இ) மாணிக்கவாசகர் ஈ) சேக்கிழார் **[விடை: அ) ஜெயதேவர்]**

**5. ________ பற்றிய பல செய்திகளை 'தாஜ்-உல்-மா-அசிர்' என்ற நூல் முன் வைக்கிறது.**

அ) நஸ்ருதீன் ஆ) இபன்பதூதா
இ) கஜினி மாமுத் ஈ) குத்புதீன் ஐபக் **[விடை: ஈ) குத்புதீன் ஐபக்]**

**6. தபகத் என்பது ________ சொல் ஆகும்.**

அ) இலத்தின் ஆ) சமஸ்கிருதம் இ) அரேபியச் ஈ) உருது

**[விடை: இ) அரேபியச்]**

**7. ________ துறைமுகம் அரேபியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் வந்த கப்பல்களால் நிரம்பியிருந்த துறைமுகப் பட்டினமாகும்.**

அ) காயல் ஆ) மதுரை இ) சென்னை ஈ) கொல்கத்தா

**[விடை: அ) காயல்]**

www.surabooks.com

**8. இபன் பதூதாவின் கருத்துப்படி ________ செல்வம் கொழித்த நாடாகும்.**

அ) கெய்ரோ ஆ) சீனா இ) எகிப்து ஈ) இந்தோனேசியா

**[விடை: இ) எகிப்து]**

**9. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை ________ யில் இருந்து தேவகிரிக்கு மாற்றினார்.**

அ) டெல்லி ஆ) மும்பை இ) லாகூர் ஈ) காஷ்மீர்

**[விடை: அ) டெல்லி]**

**10. மதுரா விஜயம், அமுக்த மால்யதா ஆகிய இலக்கியங்கள் ________ பேரரசுடன் தொடர்புடையது.**

அ) சோழ ஆ) விஜயநகர இ) டெல்லி ஈ) சந்தேலர்கள்

**[விடை: ஆ) விஜயநகர]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கி.பி (பொ.ஆ) 1200 முதல் 1700 வரையிலான காலப்பகுதி ____________ இந்திய வரலாறு என்று அழைக்கப்பட்டது. **[விடை: பின் இடைக்கால]**
2. 13ம் நூற்றாண்டு முதல் செப்புப் பட்டயங்களுக்கு மாற்றாக __________ மற்றும் __________ பயன்பாட்டுக்கு வந்தன. **[விடை: பனையோலை, காகிதம்]**
3. பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் __________ எனப்படும். **[விடை: பிரம்மதேயம்]**
4. பிராமணர் அல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள் ____________ எனப்படும். **[விடை: வேளாண்வகை]**
5. சாலபோகம் என்பது ____________ பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும். **[விடை: கல்வி நிலையங்களைப்]**
6. கோவில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ____________ எனப்படும். **[விடை: தேவதானம்]**
7. பள்ளிச் சந்தம் என்பது ____________ நிறுவனங்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்கள் ஆகும். **[விடை: சமண சமய]**
8. தென்னிந்தியாவில் உள்ள ____________ இடைக்கால இந்திய வரலாற்றுக்கான சான்றுக் கருவூலங்களாகும். **[விடை: ஹம்பி]**
9. 15ம் நூற்றாண்டின் இறைநிலை உணர்வு பெற்ற கவிஞர் ________. **[விடை: கபீர்தாஸ்]**
10. சந்த் பார்தையின் _______ ராஜபுத்திர அரசர்களின் மனத்துணிச்சலைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. **[விடை: பிருதிவி ராஜ ராசோ]**

## III. பொருத்துக.

**1.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. சேக்கிழார் | - | i. தாரிக்-இ-பதானி |
| 2. மாணிக்கவாசகர் | - | ii. மதுரா விஜயம் |
| 3. கங்கா தேவி | - | iii. அமுக்த மால்யதா |
| 4. கிருஷ்ண தேவராயர் | - | iv. பெரியபுராணம் |
| 5. பதானி | - | v. திருவாசகம் |

**[விடை: 1-iv, 2-v, 3-ii, 4-iii, 5-i]**

**2.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. சார்மினார் | - | i. அரண்மனை |
| 2. பிரோஷ் ஷா கொத்தளம் | - | ii. ஹைதராபாத் |
| 3. ஜோத்பூர் | - | iii. பிரகதீஸ்வரர் கோவில் |
| 4. அலெய்தர் வாஷா | - | iv. கல்லறைகள் |
| 5. தஞ்சாவூர் | - | v. டெல்லி |

**[விடை: 1-ii, 2-v, 3-i, 4-iv, 5-iii]**

## IV. சரியா? தவறா?

1. பிற்காலச் சோழர்கள் காலத்தில் செப்புப்பட்டயக் கொடை ஆவணங்களில் கொடை வழங்கியவர், பெற்றவர் ஆகியோரின் விவரங்கள் இடம்பெற்றிருக்கும். **[விடை: சரி]**

2. தேவதானம் என்பது கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும். **[விடை: தவறு]**

3. ஜெய்பூர், ஜெய்சால்மர், ஜோத்பூர் ஆகிய இடங்களிலுள்ள அரண்மனைகள், ராஜபுத்திரர்களின் மேன்மைக்கான அடையாளங்களாகும். **[விடை: சரி]**

4. இல்துமிஷ் அறிமுகம் செய்தது 'டங்கா' எனப்படும் தங்க நாணயம் ஆகும். **[விடை: தவறு]**

## V. (அ) கூற்றைக் காரணத்தோடு பொருத்துக : பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.

1. **கூற்று : குத்புதீன் ஐபக் பற்றிய பல செய்திகளை தாஜ்-உல்-மா-அசிர் என்ற நூல் விவரிக்கின்றது.**
**காரணம் : இந்நூலே டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறும், அரசின் இசைவு பெற்ற நூலாகும்.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

இ) கூற்று தவறு, காரணம் சரி.

ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

**[விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

2. **கூற்று : அல்-பரூனி இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு இந்தியாவையும் அதன் மக்களையும் புரிந்து கொள்ள முயன்றார்.**
**காரணம் : தாகுயூக்-இ-ஹிந்த் என்ற தனது நூலில் இந்தியாவின் நிலைகளையும், சமூக விதிகளையும், மதத்தையும் குறித்து விவாதித்துள்ளார்.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

ஆ) கூற்று சரி காரணம் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் தவறு.

ஈ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

**[விடை: ஈ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

## VI. குறுகிய விடையளிக்கவும்.

1. **ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்த கா∴பிகானின் புகழ்பெற்ற கூற்று உங்களுக்குத் தெரியுமா?**

விடை: விசுவாசம் உள்ளவராக இருத்தல், லாப நோக்கம் இல்லாமை, ஆபத்துக்கு அஞ்சாமை, ஒருதலைப்பட்சமாக இல்லாதிருத்தல், விருப்பு வெறுப்பின்றி இருத்தல், நண்பருக்கும் அந்நியருக்குமிடையே வேற்றுமைபாராமை, நேர்மையுடன் எழுதுதல் ஆகியவை வரலாற்று ஆசிரியர்களின் கடமைகள் என அவர் கூறியுள்ளார்.

2. **முதல்நிலைச் சான்றுகள் குறிப்பு வரைக.**

விடை: பொறிப்புகள், (கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள்) நினைவுச்சின்னங்கள், நாணயங்கள் ஆகியவையும் அவற்றிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற செய்திகளும் முதல்நிலைச் சான்றுகள் ஆகும்.

3. **இரண்டாம் நிலைச் சான்றுகள் யாவை?**

விடை: இலக்கியங்கள், காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள், பயணக்குறிப்புகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், சுயசரிதைகள் ஆகியன இரண்டாம் நிலைச் சான்றுகள் ஆகும்.

**4. எவையெல்லாம் நினைவுச் சின்னங்கள் என்று அழைக்கப்படும்?**

**விடை:** கோவில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், ஸ்தூபிகள் ஆகிய கட்டடங்கள் நினைவுச் சின்னங்கள் என அழைக்கப்படும்.

**5. ஜிட்டல் என்றால் என்ன?**

**விடை:** ஒரு ஜிட்டல் 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும். 48 ஜிட்டல்கள் 1 வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.

**6. சோழர்கால சமய இலக்கியங்கள் பற்றி நிவீர் அறிவன யாவை?**

**விடை:**
1. சோழர்களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலம் என்று அழைக்கப்படுகின்றது.
2. 'கம்பராமாயணம்', சேக்கிழாரின் பெரியபுராணம், பன்னிரு ஆழ்வார்களால் இயற்றப்பட்டு நாதமுனியால் தொகுக்கப்பட்ட நாலாயிர திவ்ய பிரபந்தம், அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரால் இயற்றப்பட்டு நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட தேவாரம், மாணிக்கவாசகரின் திருவாசகம் ஆகியவை சோழர்காலப் பக்தி இலக்கியங்களாகும்.

**7. அல்-பரூனி - குறிப்பு வரைக.**

**விடை:**
1. கஜினி மாமூதின் ஒரு படையெடுப்பின்போது அவருடன் அல்-பரூனி இந்தியாவிற்கு வந்து 10 ஆண்டுகள் தங்கியிருந்தார்.
2. கஜினி மாமூத்தின் சோமநாதபுரப் படையெடுப்பு குறித்துத் துல்லியான தகவல்கள் இவர் கொடுத்ததாகும்.
3. ஒரு கற்றறிந்த அறிஞரான இவர் இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டவர். 'தாகுயூக்-இ-ஹிந்த்' என்ற தனது நூலில் இந்தியாவின் நிலைகளையும் அறிவு முறையினையும், சமூக விதிகளையும், மதத்தையும் குறித்து விவாதித்துள்ளார்.

**8. இபன் பதூதா - குறிப்பு வரைக.**

**விடை:**
1. இபன் பதூதா மொராக்கோ நாட்டு அறிஞர் ஆவார். அவருடைய பயணநூல் ரிக்ளா (பயணங்கள்) அவர் பயணம் செய்த நாடுகளையும், மக்களையும் பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளது.
2. இவருடைய கருத்தின்படி எகிப்தே செல்வம் கொழித்த நாடாகும். ஏனெனில் மேற்கத்திய நாடுகளுடனான இந்தியாவின் வணிகம் முழுவதும் எகிப்தின் வழியாகவே நடைப்பெற்றது.
3. இந்தியாவில் சாதி குறித்தும் சதி (உடன்கட்டை ஏறுதல்) பற்றியும் கூறியுள்ளார்.

## VII. விரிவான விடையளி.

**1. இடைக்கால இந்தியாவில் உள்ள நினைவுச் சின்னங்கள் பற்றி விரிவாக விவரிக்கவும்.**

**விடை:**
1. கோவில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், ஸ்தூபிகள் ஆகிய கட்டடங்கள் நினைவுச் சின்னங்கள் எனும் வகையைச் சார்ந்தவையாகும்.
2. டெல்லி சுல்தான்கள் புதுவகையான கட்டடக் கலையை அறிமுகம் செய்தனர். வளைவுகள், ஒடுங்கிய வடிவக்கோபுரங்கள், குவிமாடங்கள் ஆகியன முக்கியக் கூறுகளாகும்.
3. இடைக்காலத்தைச் சேர்ந்த கஜுராகோ (மத்தியப்பிரதேசம்) என்னுமிடத்திலுள்ள கோவில்கள், ராஜஸ்தான் மாநிலம், தில்வாரா (அபு குன்று) எனுமிடத்திலுள்ள கோவில்கள், கொனார்க்கில் (ஒடிசா) உள்ள வட இந்தியக் கோவில்கள் பண்பாட்டின் பரிணாம வளர்ச்சியைப் புரிந்து கொள்ள சிறந்த சான்றுகளாகும்.
4. தஞ்சாவூரிலுள்ள பெரிய கோவில் (பிரகதீஸ்வரர் கோவில்), கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களிலுள்ள கோவில்கள் பிற்காலச் சோழர்கள் தமிழ்நாட்டில் கட்டியெழுப்பிய பிரம்மாண்ட கட்டடங்களுக்கு சான்றாகும்.
5. ஹம்பியிலுள்ள வித்தாலா, விருப்பாக்சா கோவில்கள் விஜயநகர அரசர்களின் பங்களிப்பைப் பறைசாற்றுபவையாகும்.
6. முக்கிய மசூதிகளான குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி, மோத்-கி-மசூதி, ஜமா மசூதி, பதேப்பூர் சிக்ரி தர்கா, சார்மினார் ஆகியன இடைக்காலத்தைச் சேர்ந்தவையாகும்.

7. ஆக்ரா கோட்டை, சித்தூர் கோட்டை, குவாலியர் கோட்டை, டெல்லி செங்கோட்டை, பிரோஷ் ஷா கொத்தளம் ஆகியன முக்கிய கோட்டைகளாகும்.
8. ஜெய்ப்பூர், ஜெய்சால்மர், ஜோத்பூர் ஆகிய இடங்களிலுள்ள அரண்மனைகள், ராஜபுத்திரர்களின் மேன்மைக்கான அடையாளங்கள் ஆகும்.
9. குதுப்மினார், அலெய்-தர்வாஷா மற்றும் இல்துமிஷ், பால்பன் ஆகியோரின் கல்லறைகள் அனைத்து முகலாய அரசர்களின் கல்லறைகள் ஆகியவை மதிப்பு மிக்க சான்றுகள் ஆகும்.

**2. இடைக்கால இந்தியாவில் எழுதிய நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் மற்றும் சுயசரிதைகள் பற்றி விவரிக்கவும்.**

**விடை:** 1. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதின் மாமூதுவால் ஆதரிக்கப்பட்ட மின்கஜ் உஸ் சிராஜ் என்பார் 'தபகத்-இ-நஸிரி' எனும் நூலை எழுதினார். இந்நூல் முகமது கோரியின் படையெடுப்பில் தொடங்கி கி.பி. 1260 வரையிலான நிகழ்வுகள் குறித்த செய்திகளைக் கூறுகின்றன.
2. ஹசன் நிஜாமி என்பார் 'தாஜ்-உல்-மா-அசிர்' எனும் நூலை எழுதினார். குத்புதின் ஐபக் பற்றிய பல செய்திகளை இந்நூல் முன்வைக்கிறது. இந்நூலே டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறும் அரசின் இசைவு பெற்ற முதல் நூலாகும்.
3. முகமது பின் துக்ளக்கின் அரசவை வரலாற்றாசிரியர் ஜியா-உத்-பரணி, 'தாரிக்-இ-பிரோஷாகி' எனும் நூலைப் படைத்தார். இந்நூல் கியாசுதீன் பால்பன் முதல் பிரோஷ்-ஷா துக்ளக்கின் தொடக்ககால ஆட்சி வரையிலான டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றை விளக்குகிறது.
4. பெரிஷ்டாவின் தாரிக்-இ-பெரிஷ்டா இந்தியாவில் முகலாய ஆட்சியின் எழுச்சி குறித்து விவரிக்கின்றது.
5. 16ம் நூற்றாண்டில் பாபரின் 'பாபர்நாமா', அபுல் பாசலின் 'அயினி அக்பரி', அக்பர் நாமா ஆகிய நூல்கள் இவ்விரு பேரரசர்கள் குறித்த முழுமையான விவரங்களை எடுத்துரைக்கின்றன.
6. 17ம் நூற்றாண்டில் ஜஹாங்கீர் எழுதிய "தசுக்-இ-ஜாஹாங்கீரி" அக்காலக்கட்ட வரலாற்றின் மீது அதிக வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது.
7. பதானி எழுதிய மற்றொரு நூலான தாரிக்-இ-பதானி (பதானியின் வரலாறு) ஒரு மிகச் சிறந்த நூலாகும். இந்நூல் மூன்று தொகுதிகளை உடையது. அக்பரின் ஆட்சி, நிர்வாகம் மற்றும் மதக்கொள்கை பற்றி விவரிக்கின்றது.

☆ ☆ ☆

# அலகுத் தேர்வு

நேரம் : 45 நிமிடங்கள் மதிப்பெண் : 25

**I சரியான விடையைத் தேர்வு செய்க.** (3 × 1 = 3)

**1. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ________ ஆகும்.**
அ) வேளாண்வகை ஆ) சாலபோகம் இ) பிரம்மதேயம் ஈ) தேவதானம்

**2. அரேபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ________ ஆவார்.**
அ) அல்-பரூனி ஆ) மார்க்கோபோலோ இ) டோமிங்கோ பயஸ் ஈ) இபன் பதூதா

**3. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை ________ யில் இருந்து தேவகிரிக்கு மாற்றினார்.**
அ) டெல்லி ஆ) மும்பை இ) லாகூர் ஈ) காஷ்மீர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

**1.** ஒரு ____________ என்பது 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.

**2.** சாலபோகம் என்பது ___________ பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும்.

**3.** ______ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.

**III. பொருத்துக.** **(4 × 1 = 4)**

**1.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. சேக்கிழார் | - | i. திருவாசகம் |
| 2. மாணிக்கவாசகர் | - | ii. மதுரா விஜயம் |
| 3. கங்கா தேவி | - | iii. அமுக்த மால்யதா |
| 4. கிருஷ்ண தேவராயர் | - | iv. பெரியபுராணம் |

**IV. சரியா? தவறா?** **(2 × 1 = 2)**

**1.** டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி.1522 இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார்.

**2.** பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.

**V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.** **(2 × 1 = 2)**

**1.** **கூற்று : முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.**

**காரணம் : இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
இ) கூற்று தவறு, காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

**2.** **கூற்று : அல்பரூனி இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு இந்தியாவையும் அதன் மக்களையும் புரிந்து கொள்ள முயன்றார்.**

**காரணம் : தாகுயூக்-இ-ஹிந்த் என்ற தனது நூலில் இந்தியாவின் நிலைகளையும், சமூக விதிகளையும், மதத்தையும் குறித்து விவாதித்துள்ளார்.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
ஆ) கூற்று சரி காரணம் தவறு.
இ) கூற்று மற்றும் காரணம் தவறு.
ஈ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.** **(3 × 2 = 6)**

**1.** ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் என்ன?

**2.** முதல்நிலைச் சான்றுகள் குறிப்பு வரைக.

**3.** வரலாற்றை அறிந்துகொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக..

**VII. விரிவாக விடையளிக்கவும் :** **(1 × 5 = 5)**

**1.** டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.

## விடைகள்

I) 1. ஈ) தேவதானம் 2. ஈ) இபன் பதூதா 3. அ) டெல்லி
II) 1. ஜிட்டல் 2. கல்வி நிலையங்களைப் 3. உத்திரமேரூர்
III) 1. 1-iv, 2-i, 3-ii, 4-iii
IV) 1. தவறு 2. சரி
V) 1. அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
2. ஈ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
VI) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 3
2. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா VI - 2
3. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 4
VII) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VII - 1

☆ ☆ ☆

# அலகு 2

# வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. 'பிருதிவிராஜ ராசோ' எனும் நூலை எழுதியவர் யார்?**

அ) கல்ஹணர் ஆ) விசாகதத்தர் இ) ராஜசேகரர் ஈ) சந்த் பார்தை

**[விடை: ஈ) சந்த் பார்தை]**

**2. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் யார்?**

அ) முதலாம் போஜா ஆ) முதலாம் நாகபட்டர்

இ) ஜெயபாலர் ஈ) சந்திரதேவர்

**[விடை: ஆ) முதலாம் நாகபட்டர்]**

**3. கஜினி என்னும் ஒரு சிறிய அரசு எங்கு அமைந்திருந்தது?**

அ) மங்கோலியா ஆ) துருக்கி இ) பாரசீகம் ஈ) ஆப்கானிஸ்தான்

**[விடை: ஈ) ஆப்கானிஸ்தான்]**

**4. கஜினி மாமூதின் படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் யாது?**

அ) சிலை வழிபாட்டை ஒழிப்பது. ஆ) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது.

இ) இந்தியாவில் இஸ்லாமைப் பரப்புவது. ஈ) இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது.

**[விடை: ஆ) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் _________ ஆவார். **[விடை: தர்மபாலர்]**
2. கி.பி ____________ இல் சிந்துவை அரேபியர் கைப்பற்றினர். **[விடை: 712]**
3. ஆஜ்மீர் நகரத்தை நிர்மாணித்தவர் ____________ ஆவார். **[விடை: சிம்மராஜ்]**
4. காந்தர்யா கோவில் ____________ ல் அமைந்துள்ளது. **[விடை: மத்திய பிரதேசத்தில்]**

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | கஜுராகோ | அபு குன்று |
| 2. | சூரியனார் கோவில் | பந்தேல்கண்ட் |
| 3. | தில்வாரா கோவில் | கொனாரக் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | கஜுராகோ | பந்தேல்கண்ட் |
| 2. | சூரியனார் கோவில் | கொனாரக் |
| 3. | தில்வாரா கோவில் | அபு குன்று |

**IV. சரியா? தவறா?**

1. 'ராஜபுத்ர' என்பது ஒரு லத்தீன் வார்த்தை ஆகும். **[விடை: தவறு]**
2. அரசர் கோபாலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். **[விடை: சரி]**
3. அபுகுன்றில் அமைந்துள்ள கோவில் சிவபெருமானுக்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது. **[விடை: தவறு]**
4. 'ரக்ஷாபந்தன்' சகோதர உறவு தொடர்பான விழாவாகும். **[விடை: சரி]**
5. இந்தியர்கள் 0 முதல் 9 வரையிலான எண்களை அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். **[விடை: தவறு]**

**V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க: பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.**

**1. கூற்று : கன்னோஜின் மீது ஆதிக்கத்தை நிறுவவே மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.**

**காரணம் : கன்னோஜ் மிகப்பெரும் நகரமாக இருந்தது.**

அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே.

ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று தவறு. காரணம் சரி.

ஈ) கூற்றும் காரணமும் தவறு. **[விடை: ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல]**

**2. கூற்று I : மகிபாலரால் தனது நாட்டை வாரணாசியைக் கடந்து விரிவுபடுத்த முடியவில்லை.**

**காரணம் II : மகிபாலரும் முதலாம் ராஜேந்திர சோழனும் சமகாலத்தவர் ஆவர்.**

அ) I சரி ஆ) II சரி இ) I மற்றும் II சரி ஈ) I மற்றும் II தவறு

**[விடை: இ) I மற்றும் II சரி]**

**3. கூற்று : இந்தியாவில் இஸ்லாமியக் காலக்கட்டம் கி.பி.[பொ.ஆ] 712 இல் அரேபியர் சிந்துவைக் கைப்பற்றிய உடன் தொடங்கவில்லை.**

**காரணம் : கூர்ஜரப் பிரதிகாரர்கள் அரேபியரைக் கடுமையாக எதிர்த்தனர்.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்றும் தவறு, காரணம் சரி.

**[விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

**4. கூற்று : இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் தோல்வியடைந்தார்.**

**காரணம் : ராஜபுத்திரர்களிடையே ஒற்றுமை இல்லை.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி. **[விடை: இ) கூற்று சரி காரணம் தவறு]**

**5. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. அவற்றில் எது/எவை சரியானவை என்பதைக் கண்டறியவும்.**

(i) 'ரக்ஷாபந்தன்' என்ற மரபானது ராஜபுத்திரர்களுடையது.

(ii) வங்கப் பிரிவினையின் போது ரவீந்திரநாத் தாகூர் பெருமளவில் மக்கள் பங்கேற்ற 'ரக்ஷாபந்தன்' விழாவைத் தொடங்கினார்.

(iii) இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிப்பதற்காக ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிரானதாக இது திட்டமிடப்பட்டது.

அ) கூற்று i சரியானது. ஆ) கூற்று ii சரியானது.

இ) கூற்று iii சரியானது. ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை.

**[விடை: ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை]**

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. கன்னோஜின் மீதான மும்முனைப் போராட்டம் குறித்து எழுதுக.**

**விடை:** மாளவத்தின் கூர்ஜரப் பிரதிகாரர்கள், தக்காணத்தைச் சேர்ந்த ராஷ்டிரகூடர்கள், வங்காளத்துப் பாலர்கள் ஆகிய மூவருள் ஒவ்வொருவரும் வளம் நிறைந்த கன்னோஜின் மீது அவர்களின் மேலாதிக்கத்தை நிறுவ முயன்றனர். இதனால் ஏற்பட்ட மும்முனைப் போட்டியில் இம்மூன்று சக்திகளும் பலவீனம் அடைந்தன.

**2. ஏதேனும் நான்கு ராஜபுத்திரக் குலங்களின் பெயர்களை எழுதுக.**

**விடை:**
1. பிரதிகாரர்கள்
2. சௌகான்கள்
3. சாளுக்கியர்கள் மற்றும்
4. பரமாரர்கள்

**3. பாலர் அரச வம்சத்தை நிறுவியவர் யார்?**

**விடை:** பால அரச வம்சத்தை நிறுவியவர் கோபாலர்.

**4. தொடக்ககால, முதல் இரு கலி:பாத்துகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**விடை:** உமையத்துகளும், அப்பாசித்துகளும், தொடக்கால கலிஃபாத்துகளாகும்.

**5. காசிம் தோற்கடித்த சிந்து மன்னரின் பெயரைக் குறிப்பிடுக.**

**விடை:** காசிம் தோற்கடித்த சிந்து மன்னரின் பெயர் தாகீர்.

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்.

**1. சிந்துவை அரேபியர் கைப்பற்றியதன் தாக்கங்கள் யாவை? [ஏதேனும் ஐந்தைக் குறிப்பிடவும்]**

**விடை: சிந்துவை அரேபியர் கைப்பற்றியதன் தாக்கங்கள் :**

1. அரேபியர்கள் சிந்துப்பகுதி வாழ் மக்களுக்குப் 'பாதுகாக்கப்பட்ட மக்கள்' எனும் தகுதி வழங்கப்பட்டது.
2. மக்களின் வாழ்க்கையிலும் அவர்களின் மதங்களிலும் எவ்விதத் தலையீடும் செய்யப்படவில்லை.
3. வானியல், தத்துவம், கணிதம், மருத்துவம் தொடர்பாகச் சமஸ்கிருத மொழியிலிருந்த பல நூல்களை அவர்கள் அரேபிய மொழியில் மொழிபெயர்த்தனர்.
4. 0 முதல் 9 வரையிலான எண்களை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர்.
5. மேலைநாட்டவரும் அரேபியர்களும் சதுரங்க விளையாட்டை இந்தியர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர்.

## VIII. உயர் சிந்தனை வினா.

**அ) மாமூது கஜினியின் படையெடுப்பிற்கும் முகமது கோரியின் படையெடுப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

**விடை:**

| | மாமூது கஜினி | முகமது கோரி |
|---|---|---|
| 1. | மாமூது கஜினி இந்தியாவின் செல்வங்களை சூறையாடுவதை நோக்கமாக கொண்டிருந்தார். | முகமது கோரி இந்தியாவை கைப்பற்றி தனது பேரரசை விரிவாக்கம் செய்ய விரும்பினார். |
| 2. | இவர் பஞ்சாபிலுள்ள நாகர்கோட், டெல்லிக்கு அருகேயுள்ள தானேஸ்வர், மதுரா, கன்னோஜ் போன்ற நகரங்களை கொள்ளை அடித்தார். | இவர் 1186இல் பஞ்சாப்பை தாக்கி அதனை கைப்பற்றினார். பின்பு 1192 இரண்டாம் தரெயின் போரில் பிருத்விராஜ் சௌகானை தோற்கடித்தார். |

**ஆ) கண்டு பிடித்து நிரப்புக.**

| | முதலாம் தரெய்ன் போர் | இரண்டாம் தரெய்ன் போர் |
|---|---|---|
| போர் நடைபெற்ற ஆண்டு | 1191 | 1192 |
| போருக்கான காரணங்கள் | **முகமது கோரி தனது பேரரசை விரிவுபடுத்த விரும்பினார்.** | **முதல் தரெய்ன் போரில் தோற்றதற்கு பழி வாங்க.** |
| யார் யாரைத் தோற்கடித்தார்கள்? | **பிருதிவிராஜ் சௌகான் முகம்மது கோரியை தோற்கடித்தார்.** | **முகமது கோரி பிருதிவிராஜ் சௌகானை தோற்கடித்து கைது செய்து கொன்றார்.** |
| விளைவு என்ன? | **இப்போர் இரண்டாம் தரெயின் போருக்கு வழிவகுத்தது.** | **இப்போர் பேரிழப்பை ஏற்படுத்தியது. ராஜபுத்திர்களின் அரசியல் கௌரவம் பெரும் பின்னடைவை சந்தித்தது.** |

## IX. மாணவர் செயல்பாடு :

**1. அ) வார்த்தைத் துளிகள் :** ஹர்சர், ராஜபுத்திரர், கன்னோஜ், விக்கிரமசீலா, பிருதிவிராஜ், கலி:பா

**இவ்வார்த்தைகள் பற்றி மாணவர்களுக்கு என்ன தெரியும் என்பதை மாணவர்கள் விவாதிக்க வேண்டும்; குறிப்பும் எழுத வேண்டும்.**


1. **ஹர்சர் :** ஹர்ஷவர்தனர் வட இந்தியாவை 40 வருடங்கள் வரை ஆண்ட ஒரு இந்தியப் பேரரசர். இவர் தனது பேரரசை மேற்கில் பஞ்சாப் முதல் கிழக்கில் வங்காளம் வரைவிரிவுபடுத்தினார். ஒரு மிகப்பெரிய படையை உருவாக்கினார். இவர் புத்த மதத்தை பின்பற்றியவர். இவர் கன்னோசியை தனது தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தார். இவருடைய காலத்தில் சீன நாட்டுப் பயணி யுவான் சுவாங் இவரது அரசவைக்கு வந்து தங்கியிருந்தார். இவர் காலத்தில் கட்டிய நாளந்தா பல்கலைக்கழகம் மிகவும் பிரசித்தி பெற்றது. இவர் ஓர் சிறந்த நூல் ஆசிரியர். இவர் எழுதிய நூல்கள் ஹர்ஷசரிதம் மற்றும் காதம்பரி மிகவும் புகழ்பெற்ற நூலாகும். மேலும் இவர் ஒரு சிறந்த நாடக ஆசிரியரும் ஆவார். நாகானந்தம், பிரியதர்ஷிகா, இரத்தினாவளி ஆகியவை இவர் எழுதிய நாடகங்கள் ஆகும்.
2. **ராஜபுத்திரர் :** ஹர்சரின் மறைவுக்கு பிறகு வடக்கு மற்றும் மத்திய இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு ராஜபுத்திர இனக்குழுக்கள் தங்கள் அரசுகளை நிறுவிக்கொண்டன. அவர்களின் மிக முக்கியமான மூன்று குலங்கள் சூரிய குலம், சந்திர குலம் மற்றும் அக்னி குலம் ஆகும். ராஜபுத்திரர்களுள் மிக முக்கியமானவர்கள் பந்தேல்கண்டின் சந்தேலர்கள் ஆவார். ஹரியானா பகுதியில் தோமரர்கள் ஆட்சி புரிந்தனர். ஜேம்ஸ் டாட் எனும் கீழ்த்திசைப் புலமையாளர் கி.பி.(பொ.ஆ) 1829இல் முக்கியமான 36 ராஜபுத்திர அரசகுலங்களைப் பட்டியலிட்டுள்ளார். அவற்றுள் நான்கு குலங்கள் சிறப்புத்தகுதி பெற்றவையாகும். அவர்கள் பிரதிகாரர்கள், சௌகான்கள், சாளுக்கியர்கள் மற்றும் பரமாரர்கள் ஆவார்.
3. **கன்னோஜ் :** வட இந்தியாவின் முக்கிய நகரமாகும். ஹர்சர் கன்னோஜை தலைநகராக் கொண்டு ஆட்சி புரிந்தார். இங்கு 10,000 த்திற்கும் மேற்பட்ட புத்த சமய துறவிகள் இங்கு வாழ்ந்து வந்தனர். பிற மத கோவில்களும் இருநூற்றுக்கும் மேல் இருந்ததாகக் கருதப்படுகிறது. நன்கு திட்டமிடப்பட்ட வீதிகளும் பூங்காக்களும் புத்த மடாலயங்களும் கன்னோஜை அலங்கரித்தன. மேலும் பல வட இந்திய மன்னர்களின் தலைநகராக கன்னோசி விளங்கியது. 1018ல் கஜினி முகம்மது கன்னோசி நகரை வென்றார். முகம்மது கோரி கன்னோசியின் அரசர் ஜெயசந்திரனின் மகள் சம்யுக்தாவை பிருதிவிராஜ் சௌகான் திருமணம் செய்தார். தில்லி சுல்தான் இல்த்துமிஷ் கன்னோஜை வென்றதன் மூலம் கன்னோசியின் புகழ் வீழ்ந்தது.
4. **விக்கிரமசீலா :** விக்கிரமசீலா மடாலயம் தர்மபாலரால் உருவாக்கப்பட்ட பௌத்தக் கல்விக்கான மிகச் சிறந்த மையமாயிற்று. பௌத்தக் கோவில்களையும் இப்பல்கலைக்கழகத்தையும் பாலர்கள் பரந்த மனப்பான்மையுடன் ஈகைக் குணத்தோடும் ஆதரித்தனர். பெயரும் புகழும்பெற்ற பௌத்தத் துறவியும் திபெத்திய பௌத்தத்தைச் சீர்திருத்தம் செய்தவருமான அதிசா விக்கிரமசீலா மடாலயத்தின் தலைவராக இருந்தார். இக்கல்வி மையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் பயின்றனர்.
5. **பிருதிவிராஜ் :** சௌகான் வம்சாவளியின் கடைசி அரசான பிருத்விராஜ் சௌகானே அவ்வரச வம்சாவளி அரசர்களுள் தலைச்சிறந்தவர் ஆவார். இவர் முஸ்லிம் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக இராசபுத்திரரை ஒன்றுபடுத்தினார். கன்னோசி நாட்டின் மன்னன் ஜெயச்சந்திரன் மகளான சம்யுக்தாவுடன் பிரித்திவிராஜ் கொண்ட காதல் வட இந்தியாவின் புகழ்பெற்ற ஒரு காதல் கதை ஆகும். இவரின் நண்பருமான சந்த்பார்தை எழுதிய பிருதிவிராஜ் ராசோ என்ற காவியத்தின் கருப்பொருளும் இதுவே. இவர் 1191 ஆம் ஆண்டு நடைப்பெற்ற முதல் தரெயின் போரில் முகமது கோரியைத் தோற்கடித்தார். இருந்த போதிலும் 1192 இல் நடைபெற்ற இரண்டாம் தரெயின் போரில் இவர் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
6. **கலிஃபா :** ஓர் இஸ்லாமிய அரசு அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும் ஒரே நபரால் ஆளப்பட்டால் அவ்வரசு கலீஃபா என்றழைக்கப்பட்டது. கலீஃபா பிரதிநிதி என்று பொருள். கலீஃபா என்னும் சொல்லுக்கு, இறைதூதர் முகமது நபிகளின் பிரதிநிதி என்று பொருள். உமையத்துகளும் அப்பாசித்துகளும் தொடக்ககால கலிஃபத்துகளாகும். உமையதுகளும் அப்பாசித்துகளும் தனித்தனியே தங்கள் படையெடுப்புகளின் மூலமும் இஸ்லாமின் கோட்பாடுகளைப் பரப்பியதன் வழியாகவும் தங்கள் ஆட்சியை விரிவுபடுத்தினார்.

**ஆ)** **இந்தியாவிற்கு இஸ்லாமியரின் வருகை**

- கி.பி (பொ.ஆ) 1192 — **இரண்டாம் தரெயின் போர்**
- கி.பி (பொ.ஆ) 1191 — **முதலாம் தரெயின் போர்**
- கி.பி (பொ.ஆ) 1175 — **முகம்மது கோரி முல்தானை கைப்பற்றினார்**
- கி.பி (பொ.ஆ) 1030 — **கஜினிமாமூத் மரணம்**
- கி.பி (பொ.ஆ) 1001 — **கஜினி மாமுத்தால் ஷாகி அரசர் ஜெயபாலர் தோற்கடிக்கப்பட்டார்**
- கி.பி (பொ.ஆ) 712 — **சிந்துப் பகுதியை அராபியர் கைப்பற்றினர்**

**X. வரைபட வினா :**

**1. இந்திய ஆறுகள் வரைபடத்தில் பிரதிகாரர்கள், சௌகான்கள், பாலர்கள், பரமாரர்கள் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுக.**




**XI. கட்டக வினாக்கள்.**

| | |
|---|---|
| 1. மாமூது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட பஞ்சாபின் ஷாகி வம்ச அரசர் யார்? **[விடை: ஜெயபாலர்]** | 4. இந்தியாவில் முதல் இஸ்லாமியப் பேரரசை உருவாக்கியவர் யார்? **[விடை: முகம்மது கோரி]** |
| 2. ராஜபுத்திர ஓவிய பாணிகள் ________ என்று அழைக்கப்படுகின்றன. **[விடை: ராஜஸ்தானி]** | 5. டெல்லியின் முதல் சுல்தான் யார்? **[விடை: குத்புதீன் ஐபக்]** |
| 3. ராஜபுத்திரக் குலங்கள் எத்தனை இருந்தன? **[விடை: 36]** | 6. மெக்கா எங்குள்ளது? **[விடை: அரேபியா]** |

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ராஜபுத்திரர்கள் அரசர்களின் மிக முக்கியமான ________ குலங்கள் இருந்தன.**
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5 **[விடை: இ) 4]**

**2. ________ பகுதியில் தோமரர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.**
அ) ஹரியானா ஆ) பஞ்சாப் இ) டெல்லி ஈ) உத்திரபிரதேசம் **[விடை: அ) ஹரியானா]**

**3. ஜேம்ஸ் டாட் எனும் கீழ்த்திசைப் புலமையாளர் 1829ல் ______ ராஜபுத்திர அரசக் குலங்களைப் பட்டியலிட்டுள்ளார்.**
அ) 32 ஆ) 42 இ) 36 ஈ) 46 **[விடை: இ) 36]**

**4. ________ பால வம்சத்தின் மிகச் சிறந்த வலிமை மிக்க அரசர் ஆவார்.**
அ) தர்மபாலர் ஆ) முதலாம் மகிபாலர்
இ) தேவபாலர் ஈ) சிம்மராஜ் **[விடை: ஆ) முதலாம் மகிபாலர்]**

**5. மகிபாலரின் இறப்பைத் தொடர்ந்து ________ வீழ்ச்சியுற்றது.**
அ) பால வம்சம் ஆ) சந்தேல வம்சம்
இ சௌகான் வம்சம் ஈ) பிரதிகாரர் வம்சம் **[விடை: அ) பால வம்சம்]**

**6. சௌகான் வம்சாவளியின் கடைசி அரசன் ________.**
அ) சிம்மராஜ் ஆ) பிருதிவிராஜ் இ) மிகிர போஜா ஈ) வத்சராஜா **[விடை: ஆ) பிருதிவிராஜ்]**

**7. ராஜ்புத் எனும் சொல் ________ மொழியில் இருந்து பெறப்பட்டது.**
அ) லத்தின் ஆ) அராபிய இ) சமஸ்கிருதம் ஈ) கிரேக்கம் **[விடை: இ) சமஸ்கிருதம்]**

**8. முதல் தரெய்ன் போர் நடைபெற்ற வருடம் ________.**
அ) கி.பி. 1191 ஆ) கி.பி. 1192 இ) கி.பி. 1091 ஈ) கி.பி. 1092 **[விடை: அ) கி.பி. 1191]**

**9. 1905 ஆம் ஆண்டு ________ பெருமளவில் மக்கள் பங்கேற்ற ரக்ஷாபந்தன் விழாவைத் தொடங்கினார்.**
அ) பெரோஷா ஆ) முகமது பின் துக்ளக்
இ) ரவீந்திரநாத் தாகூர் ஈ) மொராஜி தேசாய் **[விடை: இ) ரவீந்திரநாத் தாகூர்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பந்தேல்கண்டிலுள்ள ________ வளாகத்தில் 30 கோயில்கள் உள்ளன. **[விடை: கஜுராகோ]**
2. விக்கிரமசீலா மடாலயத்தின் தலைவராக இருந்தவர் ________. **[விடை: அதிசா]**
3. பாலர்களின் கலை ________ கலை என்றும் அழைக்கப்படும். **[விடை: கிழக்கு இந்தியக்]**
4. ஜோத்பூரில் உள்ள சமணக் கோயில் ________. **[விடை: ஓசியான்]**
5. ________ 0 முதல் 9 வரையிலான எண்களை இந்தியர்களிடம் கற்றுக்கொண்டனர். **[விடை: அரேபியர்கள்]**
6. அரேபியர்கள் ________ முக்கியத்துவத்தை இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர். **[விடை: பூஜ்யத்தின்]**
7. பஞ்சாப் நகரிலுள்ள நாகர்கோட் தானேஸ்வர் ஆகிய நகரங்கள் ________ ஆல் சூறையாடப்பட்டன. **[விடை: கஜினி முகமது]**
8. மாமூது மிகவும் புகழ்பெற்ற ________ கோவிலைக் கொள்ளையடித்து சென்றார். **[விடை: சோமநாதபுரம்]**
9. முகமது கோரி ________ இல் பஞ்சாப்பைத் தாக்கி அதனைக் கைப்பற்றினார். **[விடை: 1186]**
10. ________ டெல்லியின் முதல் சுல்தான் ஆவார். **[விடை: குத்புதின் ஐபக்]**

**III. பொருத்துக.**

**1.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. பிரதிகாரர்கள் | – | i. அஸ்ஸாம் |
| 2. பாலர்கள் | – | ii. 1191 |
| 3. காமரூபம் | – | iii. 1192 |
| 4. முதல் தரெயின் போர் | – | iv. ராஜஸ்தான் மற்றும் மாளவம் |
| 5. இரண்டாம் தரெயின் போர் | – | v. வங்காளம் |

**[விடை: 1-iv, 2-v, 3-i, 4-ii, 5-iii]**

## IV. சரியா? தவறா?

1. பதினைந்தாம் நூற்றாண்டிலும் அவற்றைத் தொடர்ந்து முகமது கோரி மேற்கொண்ட படையெடுப்புகளும் இந்தியாவில் இஸ்லாமியர் ஆட்சி தோன்றுவதற்கு காரணமாக இருந்தன. **[விடை: தவறு]**
2. ஹர்ஷருக்கு பின்னர் புதிய பிராந்திய அரசுகள் உதயமாயின. **[விடை: சரி]**
3. முகமது கோரி இந்தியாவை கொள்ளையடிக்க விரும்பினார். **[விடை: தவறு]**
4. இரண்டாம் தரெய்ன் போர் நடைபெற்ற ஆண்டு 1191. **[விடை: தவறு]**
5. கஜினி மாமூது இந்தியாவின் மீது பதினேழு முறை படையெடுத்ததாக கூறப்படுகிறது. **[விடை: சரி]**

## V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து பொருத்தமான விடையை (✓) செய்க.

1. **கூற்று : கன்னோஜ் ஒரு வளம் நிறைந்த பகுதி**

**காரணம் : மாளவத்தின் கூர்ஜரப் பிரதிகாரர்கள், தக்காணத்தைச் சேர்ந்த ராஷ்டிர கூடர்கள், வங்காளத்துப் பாலர்கள் ஆகிய மூவரும் அவர்களின் மேலாதிக்கத்தை நிறுவ முயன்றனர்.**

அ) கூற்று மற்றும் காரணம் தவறு. ஆ) காரணம் சரி கூற்று தவறு.
இ) காரணம் மற்றும் கூற்று சரி ஈ) கூற்று சரி காரணம் தவறு

**[விடை: இ) காரணம் மற்றும் கூற்று சரி]**

2. (i) ராஜபுத்திர அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர் சிம்மராஜ்.
(ii) சௌகான் வம்சாவளியின் கடைசி அரசன் பிருத்திவிராஜ் சௌகான்.
(iii) ராஜஸ்தானி ஓவியங்கள் கோத்பூர், பிக்கனேர் போன்ற இடங்களில் காணலாம்.

அ) கூற்று (ii) சரியானது ஆ) கூற்று (ii) தவறானது
இ) கூற்று (iii) சரியானது ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை

**[விடை: ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை]**

## VI. குறுகிய விடையளிக்கவும்.

1. **பிரதிகார அரசர்களுள் முக்கியமான அரசர் யார்? அவரைப் பற்றி குறிப்பு தருக.**

விடை:
1. பிரதிகார அரசர்களுள் முதலாவது மற்றும் முக்கியமான அரசர் முதலாம் நாகபட்டர் என்பவர் ஆவார்.
2. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பருச், ஜோத்பூர் ஆகிய பகுதிகளை ஆட்சி செய்த அவர் தனது ஆட்சிப்பரப்பைக் குவாலியர் வரை விரிவுபடுத்தினார்.
3. சிந்துவின் மீது அரேபியர் மேற்கொண்ட படையெடுப்பை அவர் முறியடித்தார். அவருக்கு பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற வத்சராஜா ஒட்டு மொத்த வட இந்தியாவில் ஆதிக்கம் செலுத்த ஆசைப்பட்டார்.

2. **தர்மபாலர், தேவபாலர் ஆகியோரின் ஆட்சிக் காலங்கள் வங்காள வரலாற்றின் சிறப்பு மிக்க ஒளிரும் அத்தியாயங்கள் - ஏன்?**

விடை:
1. தர்மபாலர் பால அரசை வட இந்திய அரசியலில் ஒரு வலிமை மிக்க சக்தியாக உருவாக்கினார். கன்னோஜ்க்கு எதிராக வெற்றிகரமான படையெடுப்பை அவர் மேற்கொண்டார்.
2. அவர் மிகச் சிறந்த பௌத்த ஆதரவாளராவர். அவரால் உருவாக்கப்பட்ட விக்கிரமசீலா மடாலயம் பௌத்தக் கல்விக்கான மிகச் சிறந்த மையமாயிற்று.
3. தர்மபாலரைத் தொடர்ந்து அவருடைய மகன் தேவபாலர் ஆட்சிப்பொறுப்பேற்றார். அவர் பாலர்களின் ஆட்சி அதிகாரத்தைக் கிழக்கு நோக்கி காமரூபம் (அஸ்ஸாம்) வரை விரிவுபடுத்தினார்.
4. அவரும் தலைசிறந்த பௌத்த ஆதரவாளர் ஆவார். அவர் பௌத்தர்களுக்கு ஐந்து கிராமங்களைக் கொடையாக வழங்கினார். அவரும் மகதத்தில் மடாலயங்களையும் பல கோவில்களை நிறுவினார்.

3. **ராஜபுத்திரர்களின் கோவில் கட்டக்கலைக்கு எடுத்துக்காட்டுகள் யாவை?**

விடை: கஜுராகோ என்னும் இடத்திலுள்ள கோவில்கள், கொனார்க்கிலுள்ள சூரியனார் கோவில், அபு குன்றின் மீது கட்டப்பட்டுள்ள தில்வார சமணக் கோவில் மத்தியபிரதேசத்தில் அமைந்துள்ள காந்தர்யா கோவில் ஆகிய ராஜபுத்திரர்களின் கோவில் கட்டிடக்கலைக்கு உன்னதமான எடுத்துக்காட்டுகளாகும்.

**4. முதலாம் மகிபாலர் - குறிப்பு தருக.**

**விடை:** 1. முதலாம் மகிபாலர் பால வம்சத்தின் மிகச் சிறந்த வலிமை மிக்க அரசர் ஆவார். அவர் இரண்டாம் பால வம்சத்தைத் தோற்றுவித்தவர் ஆவார்.

2. பண்டைய புகழையும் பெயரையும் மகிபாலர் மீட்டெடுத்தார்.

3. வாரணாசி, சாரநாத், நாளந்தா ஆகிய இடங்களில் சமயம் சார்ந்த ஏராளமான கட்டடங்களைக் கட்டுவித்த மகிபாலர் பழைய கட்டடங்களையும் புனரமைத்தார்.

**5. சௌகான்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

**விடை:** 1. சௌகான்கள் கி.பி. (பொ.ஆ) 956 முதல் 1192 வரை இன்றைய ராஜஸ்தானின் கிழக்குப் பகுதிகளைச் சாகம்பரி நகரில் தலை நகரை நிறுவி ஆட்சி புரிந்தவர்களாவர்.

2. இந்த ராஜபுத்திர அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர் சிம்மராஜ் என்பவராவார். இவர் ஆஜ்மீர் நகரைத் தோற்றுவித்தவர் எனவும் அறியப்படுகிறது.

3. 1191 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தரைய்ன் போரில் முகமது கோரியை தோற்கடித்தார்.

**6. ராஜபுத்திர அரசவைகள் பண்பாட்டு மையங்களாக திகழ்ந்தன எவ்வாறு என்பதை விளக்கவும்.**

**விடை:** 1. ராஜபுத்திர அரசவைகள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தன. அங்கு இலக்கியம், இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளும் கவின் கலைகளும் செழிப்புற்றன.

2. ராஜஸ்தான் பாணியிலான ஓவியங்கள் பிக்கனேர், ஜோத்பூர் (இவ்விரு இடங்களும் ராஜஸ்தானில் உள்ளன). மேவார் (உதய்பூர்), ஜெய்சால்மர் (ராஜஸ்தான்), புரி (ஹரியானா) ஆகிய இடங்களில் காணக் கிடைக்கின்றன.

**7. ராஜபுத்திரர்களின் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

**விடை:** 1. கட்டடங்கள் கட்டுவதில் ராஜபுத்திரர் தலைசிறந்தவராவார். சித்தோர்கார், ரான்தம்பூர், கும்பல்கார் (இவை அனைத்தும் ராஜஸ்தானில் உள்ளன).

2. மாண்டு, குவாலியர், சந்தேரி, அசிர்கார் (இவையனைத்தும் மத்தியபிரதேசத்தில் உள்ளன) ஆகிய இடங்களிலுள்ள வலிமை மிகுந்த கோட்டைகள் ராஜபுத்திரர்களின் கட்டடங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

**8. கஜீராகோ - குறிப்பு தருக.**

**விடை:** பந்தேல் கண்டிலுள்ள கஜுராகோ வளாகத்தில் மொத்தம் 30 கோவில்கள் அமைந்துள்ளன. கஜுராகோ கோவில்களின் சிகரங்கள் எழில் மிகுந்தவையாகும். கோவிலின் வெளிப்புறமும் உட்புறமும் மிக நேர்த்தியான சிற்பங்களைக் கொண்டுள்ளன. இக்கோவில்கள் சமண தீர்த்தங்கரர்களுக்கும் சிவன், விஷ்ணு ஆகிய இந்துக் கடவுள்களுக்கும் படைத்தளிக்கப்பட்டுள்ளன.

**9. ஓசியான் கோவில் விவரிக்கவும்.**

**விடை:** ஜோத்பூரிலிருந்து 32 மைல் தொலைவிலுள்ள ஓசியான் என்னுமிடத்தில் பதினாறு இந்து மற்றும் சமணக் கோவில்கள் உள்ளன. அபு குன்றின் மேலுள்ள சமணக் கோவிலில் வெண்மை நிறச் சலவை கற்களால் கட்டப்பட்ட கூடம் உள்ளது . அதன் மையத்தில் பதினொரு பொது மைய வட்டங்களைக் கொண்ட குவி மாடம் அமைந்துள்ளது. இங்குள்ள தூண்களும் விதானமும் அழகிய செதுக்கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

**10. ரக்ஷாபந்தன் பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

**விடை:** 1. ரக்ஷாபந்தன் (ராக்கி) எனும் பண்பாட்டு மரபானது ராஜபுத்திரர்களுக்கு உரியதாகும். ரக்ஷா எனில் பாதுகாப்பு என்றும் பந்தன் என்பது கட்டுதல் அல்லது உறவு என்னும் பொருளாகும்.

2. இது சகோதரத்துவத்தையும் அன்பையும் கொண்டாடும் விழாவாகும். ஒரு பெண் ஓர் ஆடவனின் மணிக்கட்டில் ராக்கியைக் கட்டிவிட்டால் அப்பெண் அந்த ஆடவனை சகோதரனாகக் கருதுகிறாள் என்று பொருள். அப்படியான ஆடவர்கள் அப்பெண்களைப் பாதுகாக்கக் கடமை பட்டவர்கள் ஆவர்.

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. முதலாம் மற்றும் இரண்டாம் தரெய்ன் போர் பற்றி விளக்கவும்.**

விடை:1. வட இந்திய இந்து அரசர்கள் பிருதிவிராஜ் சௌகானின் தலைமையில் ஒரு கூட்டணியை உருவாக்கினார்.

2. நெருக்கடி நிலையைச் சமாளிக்கும் ஆற்றல் கொண்டவராகப் பிருதிவிராஜ் சௌகான் 1191 இல் டெல்லிக்கு அருகே தரெய்ன் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் முகமது கோரியைத் தோற்கடித்தார்.
3. இப்போர் முதலாம் தரெய்ன் போர் என்று அழைக்கப்படுகிறது. இத்தோல்விக்குப் பழிவாங்கும் பொருட்டு முகமது கோரி தீவிரமான ஏற்பாடுகளை மேற்கொண்டு பெரும்படையைத் திரட்டினார்.
4. தன்னுடைய பெரும்படையோடு பெஷாவர், முல்தான் வழியாக லாகூரை வந்தடைந்தார். தன்னுடைய மேலாதிக்கத்தை அங்கீகரிக்குமாறும் ஒரு முஸ்லீமாக மாறும்படியும் அவர் பிருதிவிராஜ் சௌகானுக்குச் செய்தியனுப்பினார்.
5. அதனை மறுத்த பிருதிவிராஜ் போருக்குத் தயாரானார். பல இந்து அரசர்களும் குறுநிலத் தலைவர்களும் அவருடன் அணிவகுத்தனர். 1192 இல் நடைபெற்ற இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜின் படைகளை முற்றிலுமாகத் தோற்கடித்த முகமதுகோரி அவரைக் கைது செய்து கொன்றார்.

**2. வட இந்தியாவில் பாலர்களின் பண்பாட்டுப் பங்களிப்புப் பற்றி விரிவாக கூறவும்.**

விடை:1. பாலர்கள் மகாயான பௌத்தத்தைப் பின்பற்றியவராவர். பௌத்தக் கோவில்கள்களையும் புகழ்பெற்ற நாளந்தா, விக்கிரசீலா ஆகிய பல்கலைக்கழகங்களையும் அவர்கள் பரந்த மனப்பான்மையுடனும் ஈகை குணத்தோடும் ஆதரித்தனர்.

2. பெயரும் புகழும் பெற்ற பௌத்தத் துறவியும், திபெத்திய பௌத்தத்தைச் சீர்செய்தவருமான அதிசா (981-1054) விக்கிரமசீலா மடாலயத்தின் தலைவராக இருந்தார்.
3. சுமத்ரா மற்றும் ஜாவாவைச் சேர்ந்த இந்து பௌத்த சைலேந்திர அரசுடன் பாலர்கள் சுமூகமான உறவைப் பேணினர்.
4. பாலர்களின் ஆதரவால் கலைப்பள்ளி ஒன்று உருவானது. இது “பாலர்களின் கலை” அல்லது “கிழக்கு இந்தியக் கலை” என்று அழைக்கப்பட்டது.
5. இன்றைய பீகார், மேற்கு வங்கம் அண்டை நாடான பங்களாதேஷ் ஆகிய பகுதிகளில் தழைத்தோங்கியது.
6. இக்கலைப்பாணி பெரும்பாலும் செப்புச் சிலைகளிலும், பனை ஓலைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் எனும் வடிவங்களில் வெளிப்பட்டன. இவை புத்தரையும் ஏனைய கடவுள்களையும் புகழ்பாடுவதாய் அமைந்துள்ளன.
7. இப்பகுதியைச் சேர்ந்த பாலர்களின் செப்புச் சிலைகள் தென்கிழக்கு ஆசியாவில் இந்தியப் பண்பாடு பரவியதில் முக்கியப் பங்கு வகித்தன.

☆ ☆ ☆

# அலகுத் தேர்வு

நேரம் : 45 நிமிடங்கள் மதிப்பெண் : 25

**I சரியான விடையைத் தேர்வு செய்க. (3 × 1 = 3)**

**1. கஜினி என்னும் ஒரு சிறிய அரசு எங்கு அமைந்திருந்தது?**

அ) மங்கோலியா ஆ) துருக்கி இ) பாரசீகம் ஈ) ஆப்கானிஸ்தான்

**2. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் யார்?**

அ) ஜெயபாலர் ஆ) முதலாம் நாகபட்டர் இ) முதலாம் போஜா ஈ) சந்திரதேவர்

**3. ராஜ்புத் எனும் சொல் ________ மொழியில் இருந்து பெறப்பட்டது.**

அ) லத்தின் ஆ) அரேபிய இ) சமஸ்கிருதம் ஈ) கிரேக்கம்


enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

1. அரேபியர்கள் ___________ முக்கியத்துவத்தை இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர்.
2. கி.பி ____________ இல் சிந்துவை அரேபியர் கைப்பற்றினர்.
3. பந்தேல்கண்டிலுள்ள _________ வளாகத்தில் 30 கோயில்கள் உள்ளன.

**III. பொருத்துக.** (4 × 1 = 4)

1.

| அ | ஆ |
|---|---|
| 1. பிரதிகாரர்கள் | – i. அஸ்ஸாம் |
| 2. பாலர்கள் | – ii. 1191 |
| 3. காமரூபம் | – iii. வங்காளம் |
| 4. முதல் தரெயின் போர் | – iv. ராஜஸ்தான் மற்றும் மாளவம் |

**IV. சரியா? தவறா?** (2 × 1 = 2)

1. 'ரக்ஷாபந்தன்' சகோதர உறவு தொடர்பான விழாவாகும்.
2. இந்தியர்கள் 0 முதல் 9 வரையிலான எண்களை அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

**V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.** (2 × 1 = 2)

1. **கூற்று I : மகிபாலரால் தனது நாட்டை வாரணாசியைக் கடந்து விரிவுபடுத்த முடியவில்லை.**
   **காரணம் II : மகிபாலரும் முதலாம் ராஜேந்திர சோழனும் சமகாலத்தவர் ஆவர்.**
   அ) I சரி  ஆ) II சரி  இ) I மற்றும் II சரி  ஈ) I மற்றும் II தவறு
2. (i) ராஜபுத்திர அரச வம்சத்தைத் தோற்றுவித்தவர் சிம்மராஜ்.
   (ii) சௌகான் வம்சாவளியின் கடைசி அரசன் பிருத்திவிராஜ் சௌகான்.
   (iii) ராஜஸ்தானி ஓவியங்கள் கோத்பூர், பிக்கனேர் போன்ற இடங்களில் காணலாம்.
   அ) கூற்று (ii) சரியானது  ஆ) கூற்று (ii) தவறானது
   இ) கூற்று (iii) சரியானது  ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

1. கஜீராகோ – குறிப்பு தருக.
2. ஏதேனும் நான்கு ராஜபுத்திரக் குலங்களின் பெயர்களை எழுதுக..
3. காசிம் தோற்கடித்த சிந்து மன்னரின் பெயரைக் குறிப்பிடுக.

**VII. விரிவாக விடையளிக்கவும் :** (1 × 5 = 5)

1. வட இந்தியாவில் பாலர்களின் பண்பாட்டுப் பங்களிப்புப் பற்றி விரிவாக கூறவும்.

## விடைகள்

I) 1. ஈ) ஆப்கானிஸ்தான்  2. ஆ) முதலாம் நாகபட்டர்  3. இ) சமஸ்கிருதம்
II) 1. பூஜ்யத்தின்  2. 712  3. கஜுராகோ
III) 1. 1-iv, 2-iii, 3-i, 4-ii
IV) 1. சரி  2. தவறு
V) 1. இ) I மற்றும் II சரி  2. ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை
VI) 1. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா VI - 8
2. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா VI - 2
3. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 5
VII) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VII - 2

☆ ☆ ☆


www.surabooks.com

# அலகு 3

# தென்னிந்தியப் புதிய அரசுகள்: பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும்

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. பிற்கால சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தவர் யார்?**

அ) விஜயாலயன் ஆ) முதலாம் ராஜராஜன்

இ) முதலாம் ராஜேந்திரன் ஈ) அதிராஜேந்திரன் **[விடை: அ) விஜயாலயன்]**

**2. கீழ்க்காணும் பாண்டிய அரசர்களுள், களப்பிரர் ஆட்சியை முடித்துவைத்தவர் என அறியப்படுபவர் யார்?**

அ) கடுங்கோன் ஆ) வீரபாண்டியன்

இ) கூன்பாண்டியன் ஈ) வரகுணன் **[விடை: அ) கடுங்கோன்]**

**3. கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச் சிறிய அலகு எது?**

அ) மண்டலம் ஆ) நாடு இ) கூற்றம் ஈ) ஊர் **[விடை: ஈ) ஊர்]**

**4. விஜயாலயன் வழி வந்த சோழ வம்சத்தின் கடைசி அரசர் யார்?**

அ) வீர ராஜேந்திரன் ஆ) ராஜாதிராஜா

இ) ஆதி ராஜேந்திரன் ஈ) இரண்டாம் ராஜாதிராஜா

**[விடை: இ) ஆதி ராஜேந்திரன்]**

**5. சோழர்களின் கட்டடக்கலைக்கான எடுத்துக்காட்டை எங்குக் காணலாம்?**

அ) கண்ணாயிரம் ஆ) உறையூர் இ) காஞ்சிபுரம் ஈ) தஞ்சாவூர்

**[விடை: ஈ) தஞ்சாவூர்]**

**6. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இந்தியப் பகுதிக்கு மார்க்கோபோலோ 13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சென்றார்?**

அ) சோழமண்டலம் ஆ) பாண்டிய நாடு

இ) கொங்குப்பகுதி ஈ) மலைநாடு **[விடை: ஆ) பாண்டிய நாடு]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

**1.** ________ தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மாணித்தார்.

**[விடை: முதலாம் ராஜராஜன்]**

**2.** _______ வேதக் கல்லூரி ஒன்றை எண்ணாயிரத்தில் நிறுவினார். **[விடை: முதலாம் ராஜேந்திரன்]**

**3.** _______ வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.

**[விடை: ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் (அ) முதலாம் வரகுணன்]**

**4.** பாண்டியப் பேரரசின் அரசுச் செயலகம் _______ என அறியப்பட்டது. **[விடை: எழுத்து மண்டபம்]**

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | மதுரை | உள்நாட்டு வணிகர் |
| 2. | கங்கைகொண்ட சோழபுரம் | கடல்சார் வணிகர் |
| 3. | அஞ்சு வண்ணத்தார் | சோழர்களின் தலைநகர் |
| 4. | மணி-கிராமத்தார் | பாண்டியர்களின் தலைநகர் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | மதுரை | பாண்டியர்களின் தலைநகர் |
| 2. | கங்கைகொண்ட சோழபுரம் | சோழர்களின் தலைநகர் |
| 3. | அஞ்சு வண்ணத்தார் | கடல்சார் வணிகர் |
| 4. | மணி-கிராமத்தார் | உள்நாட்டு வணிகர் |

## IV. சரியா? தவறா?

1. டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு மதுரையில் உருவானது. **[விடை: சரி]**
2. 'கூடல் நகர் காவலன்' என்பது பாண்டிய அரசரின் பட்டமாகும். **[விடை: சரி]**
3. சோழ அரசு வைகையின் கழிமுகப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. **[விடை: தவறு]**
4. முதலாம் குலோத்துங்கன் சாளுக்கிய – சோழ அரச வம்சத்தைச் சேர்ந்தவர். **[விடை: சரி]**
5. சோழ அரசரின் மூத்த மகன் யுவராஜன் என அழைக்கப்பட்டார். **[விடை: சரி]**

## V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க :

**பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.**

1. **பிற்காலச் சோழர்கள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?**
   (i) அவர்கள் ஓர் உள்ளாட்சித் துறைத் தன்னாட்சி அமைப்பைக் கொண்டிருந்தனர்.
   (ii) அவர்கள் வலுவான கப்பற்படையைக் கொண்டிருந்தனர்.
   (iii) அவர்கள் பௌத்தத்தைப் பின்பற்றினர்.
   (iv) அவர்கள் பெரிய கோவில்களைக் கட்டினர்.
   அ) i, ii மற்றும் iii ஆ) ii, iii மற்றும் iv இ) i, ii மற்றும் iv ஈ) i, iii மற்றும் iv
   **[விடை: இ) i,ii மற்றும் iv]**

2. **இராஜேந்திர சோழனைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?**
   (i) அவர் கங்கைகொண்ட சோழன் எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.
   (ii) அவர் தெற்கு சுமத்ராவைக் கைப்பற்றினார்.
   (iii) அவர் சோழர்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தினார் எனப் போற்றப்படுகிறார்.
   (iv) அவர் ஸ்ரீவிஜயத்தைக் கைப்பற்ற அவருடைய கப்பற்படை உதவியது.
   அ) i மற்றும் ii ஆ) iii மற்றும் iv இ) i, ii மற்றும் iv ஈ) இவை அனைத்தும்
   **[விடை: ஈ) இவை அனைத்தும்]**

3. **கூற்று : யுவராஜாக்கள் மாநிலங்களின் ஆளுநர்களாகப் பணியமர்த்தப்பட்டனர்.**
   **காரணம் : நிர்வாகத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.**
   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று தவறு, காரணம் சரி.
   ஈ) கூற்றும் காரணமும் தவறு. **[விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

4. **கீழ்க்காணும் நிர்வாகப் பிரிவுகளை இறங்குவரிசையில் வரிசைப்படுத்தவும்.**
   (i) நாடு (ii) மண்டலம் (iii) ஊர் (iv) கூற்றம்
   **[விடை: i. மண்டலம், ii. நாடு, iii. கூற்றம், iv. ஊர்]**

5. **கீழ்க்காணும் நிகழ்வுகளைக் கால வரிசைப்படி எழுதவும்.**
   (i) மாறவர்மன், வீரபாண்டியனைக் கூட்டு அரசராகப் பணியமர்த்தினார்.
   (ii) உள்நாட்டுப்போர் தொடங்கியது.
   (iii) மதுரையில் ஓர் இஸ்லாமிய அரசு உருவாக்கப்பட்டது.
   (iv) மாறவர்மன் குலசேகரனுக்கு இரண்டு, மகன்கள். ஒருவர் வீரபாண்டியன் மற்றொருவர் சுந்தரபாண்டியன்.
   (v) சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார்.
   (vi) மாலிக்கபூர் மதுரையின் மீது படையெடுத்தார்.

   **விடை:**
   **(iv) மாறவர்மன் குலசேகரனுக்கு இரண்டு மகன்கள் ஒருவர் வீரபாண்டியன் மற்றொருவர் சுந்தரபாண்டியன்.**
   **(i) மாறவர்மன், வீரபாண்டினைக் கூட்டு அரசராகப் பணியமர்த்தினார்.**
   **(ii) உள்நாட்டுப்போர் தொடங்கியது.**

(v) சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார்.
(vi) மாலிக்கபூர் மதுரையின் மீது படையெடுத்தார்.
(iii) மதுரையில் ஓர் இஸ்லாமிய அரசு உருவாக்கப்பட்டது.

**6. கண்டுபிடிக்கவும் :**

| | |
|---|---|
| பிரம்மதேயம் | **பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலம்** |
| தேவதானம் | **கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலம்** |
| பள்ளிச்சந்தம் | **சமண சமய நிறுவனங்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலம்** |
| வேளாண்வகை | **பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள்** |

## VI. ஓரிரு வாக்கியங்களில் விடைளிக்கவும்.

**1. பிற்கால சோழர்கள் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவை?**

**விடை:** **பிற்கால சோழர்களின் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் :** சந்தனக்கட்டை, கருங்காலிக்கட்டை, சுவையூட்டும் பொருட்கள், விலையுயர்ந்த ஆபரணக் கற்கள், மிளகு, எண்ணெய், நெல், தானியங்கள் உப்பு.

**2. 'சதுர்வேதி மங்கலம்' என எது அழைக்கப்பட்டது?**

**விடை:** பாண்டிய அரசர்களும், உள்ளூர் தலைவர்களும், பிராமணர்கள் குடியிருப்புகளை உருவாக்கினர். அக்குடியிருப்புகள் 'சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்பட்டன.

**3. 'காணிக்கடன்' பற்றி எழுதுக.**

**விடை:** சோழ அரசின் பொதுவருவாய் முக்கியமாக நிலவரி மூலம் பெறப்பட்டது. நிலவரியானது காணிக்கடன் என அழைக்கப்பட்டது. மகசூலில் மூன்றில் ஒரு பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வரி பெரும்பாலும் தானியமாகவே வசூலிக்கப்பட்டது.

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்.

**1. சோழர்களின் ஆட்சித்திறம் பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை விவரித்து எழுதவும்.**

**விடை.**
1. சோழ அரசர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட நிர்வாக முறையை உருவாக்கியிருந்தனர். பல்வேறு அமைப்புகள்மூலம் நடைபெற்ற சோழர்களின் உள்ளாட்சி நிர்வாகம் ஒரு மிகச் சிறந்த அம்சமாகும்.
2. சோழ மன்னர்கள் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். பல வாய்க்கால்களை வெட்டினர்.
3. அவர்கள் தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தராசுபுரம் ஆகிய இடங்களில் கோயில்களைக் கட்டினர்.
4. நடனம், இசை, நாடகம், கட்டடக் கலை மற்றும் ஓவியக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்,
5. சோழப் பேரரசர்கள் கல்விப் பணிக்குப் பெரும் ஆதரவு கொடுத்தனர். பல கல்லூரிகளை நிறுவினர்.

## VIII. உயர் சிந்தனை வினா.

**1. 'சோழ அரசர்கள் பெரும் கல்விப்புரவலர்கள்' - இக்கூற்றை உறுதிசெய்க.**

**விடை:**
1. சோழ அரசர்கள் கல்விப் பணிகளுக்கு பெரும் ஆதரவு நல்கினர்.
2. முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் (விழுப்புரம் மாவட்டம்) எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார்.
3. அக்கல்லூரியில் 14 ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் 340 மாணவர்கள் வேதங்கள், இலக்கணம், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கற்றனர்.
4. அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் அப்பணியை தொடர்ந்தனர்.
5. புதுச்சேரிக்கு அருகேயுள்ள திருபுவனை எனும் ஊரிலும், இன்றைய செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடலிலும் முறையே 1048, 1067 ஆகிய ஆண்டுகளில் இதே போன்ற கல்லூரிகள் நிறுவப்பட்டன.
6. உன்னதமான இலக்கியங்களான பெரியபுராணமும், கம்பராமாயணமும் இக்காலத்தை சேர்ந்தவையாகும்.

## IX. மாணவர் செயல்பாடு.

**1. நான் யார்?**

1. **மாலிக்கபூரின் தென்னிந்தியப் படையெடுப்பிற்கு நானே பொறுப்பு.**
   **விடை:** சுந்தரபாண்டியன்
2. **நான் பதினாறு மைல் நீளமுள்ள தடுப்பு அணையைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டினேன்.**
   **விடை:** முதலாம் ராஜேந்திர சோழன்
3. **நான் நீர் விநியோகம் செய்வதற்காகக் கட்டப்பட்டவன்.**
   **விடை:** வாய்க்கால்கள்
4. **நான் திருமுறையைத் தொகுத்தேன்.**
   **விடை:** நம்பியாண்டார் நம்பி
5. **நான் ஒரு சிறப்பு வாய்ந்த துறைமுகம். மார்க்கோபோலோ என்னை இருமுறை காணவந்தார்.**
   **விடை:** காயல்பட்டினம்

| | |
|---|---|
| யார் அவர்?<br>**விடை: வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற கடற்பயணி.** | அவர் ஏன் முக்கியமானவர்?<br>**விடை: அவர் பாண்டிய நாடுப்பற்றி பல குறிப்புகளை எழுதியுள்ளார்.** |
| மார்க்கோபோலோ | |
| பாண்டிய நாட்டைப் பற்றி அவருடைய அவதானிப்புகள் யாவை?<br>**விடை: 1. அராபிய சீனக் கப்பல்களால் நிரம்பியிருந்தது.**<br>**2. வணிக நடவடிக்கைகள் அதிகம் கொண்டிருந்தன.** | அவருடைய அவதானிப்புகள் முக்கியமானவை என ஏன் நீ கருதுகிறாய்?<br>**விடை: பாண்டிய நாட்டின் எழுச்சி பற்றி நாம் அறிவதற்கு மிகவும் முக்கியமான குறிப்புகளை நமக்கு தந்துள்ளார்.** |

## X. கட்டக வினாக்கள்.

| | |
|---|---|
| 1. சோழர்கால இலக்கியங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.<br>**[விடை: பெரியபுராணமும், கம்பராமாயணமும்]** | 2. முத்துக்குளித்தலோடு தொடர்புடைய துறைமுகம் எது? **[விடை: கொற்கை]** |
| 3. காசு, கழஞ்சு, பொன் என்பவை எதைக் குறிக்கின்றன? **[விடை: நாணயங்கள்]** | 4. காயல்பட்டினம் எந்த மாவட்டத்தில் உள்ளது? **[விடை: தூத்துக்குடி]** |
| 5. முதலாம் பராந்தகனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய அரசன் யார்?<br>**[விடை: இரண்டாம் ராஜசிம்மன்]** | 6. புகழ்பெற்ற மீனாட்சி அம்மன் கோவில் எங்குள்ளது? **[விடை: மதுரை]** |

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. ________ சோழப் பேரரசின் மாபெரும் வல்லமை பெற்ற பேரரசர் ஆவார்.**

அ) முதலாம் ராஜராஜன் ஆ) அதி ராஜேந்திரம்
இ) முதலாம் ராஜேந்திரன் ஈ) முதலாம் குலோத்துங்கன்

**[விடை: அ) முதலாம் ராஜராஜன்]**

**2. ________ இல் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்தார்.**

அ) 1276 ஆ) 1179 இ) 1279 ஈ) 1379 **[விடை: இ) 1279]**

**3.** **சைவத் துறவியான திருஞானசம்பந்தர் ________ ஐ சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார்.**
அ) நரசிம்மவர்மன் ஆ) அரிகேசரி
இ) முதலாம் பராந்தகன் ஈ) நெடுஞ்சடையன் **[விடை: ஆ) அரிகேசரி]**

**4.** **________ அரசு செல்வ செழிப்பு மிக்க உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்.**
அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ **[விடை: இ) பாண்டிய]**

**5.** **பாண்டிய அரசர்களில் மாறவர்மன் குலசேகரன் ________ ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.**
அ) 40 ஆ) 25 இ) 30 ஈ) 38 **[விடை: அ) 40]**

**6.** **மாறவர்மன் குலசேகரனுக்கு ________ மகன்கள் இருந்தனர்.**
அ) இரண்டு ஆ) நான்கு இ) ஒன்று ஈ) மூன்று **[விடை: அ) இரண்டு]**

**7.** **டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு ________ ல் உருவாக்கப்பட்டது.**
அ) சென்னை ஆ) மதுரை இ) திருச்சி ஈ) தர்மபுரி **[விடை: ஆ) மதுரை]**

**8.** **________ பொது மக்களால் கூடல் நகரம் என்று அழைக்கப்பட்டது.**
அ) மதுரை ஆ) சேலம் இ) திருநெல்வேலி ஈ) கன்னியாகுமரி **[விடை: அ) மதுரை]**

**9.** **________ மாவட்டம் மானூர் என்ற ஊரில் 800ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு கிராம நிர்வாகம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது.**
அ) நீலகிரி ஆ) சேலம் இ) கடலூர் ஈ) திருநெல்வேலி
**[விடை: ஈ) திருநெல்வேலி]**

**10.** **________ மன்னர்கள் சைவம் / வைணவம் ஆகிய இரண்டையும் சமமாகவே கருதினர்.**
அ) பாண்டிய ஆ) பாலர் வம்ச இ) டெல்லி சுல்தான் ஈ) பல்லவ **[விடை: அ) பாண்டிய]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1.** வரலாற்றுச் சிறப்புமிக்க ____________ கோவிலுக்கு பாண்டியர் பேராதரவு நல்கினர்.
**[விடை: மதுரை மீனாட்சி அம்மன்]**

**2.** புகழ்பெற்ற _________ மற்றும் _________ அடியார்கள் தமிழ் இலக்கியம் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தனர். **[விடை: சைவ, வைணவ]**

**3.** பாண்டிய அரசர்கள் _________, _________ ஆகியவற்றை ஆதரித்து வளர்த்தனர்.
**[விடை: தமிழ், சமஸ்கிருதம்]**

**4.** ________, _________ நன்கறியப்பட்ட தமிழ் முடியாட்சி மன்னர்கள் ஆவர்.
**[விடை: சோழர்களும், பாண்டியர்களும்]**

**5.** ___________ பொறிப்புகள் கிராம நிர்வாகம் குறித்த விவரங்களை வழங்குகின்றன.
**[விடை: உத்திரமேரூர்]**

**6.** பாண்டியர் காலத்துக் கடல்சார் வணிகம் _________, ___________ ஆகியோரால் புகழப்பட்டுள்ளது.
**[விடை: மார்க்கோபோலோ, வாசப்]**

**7.** நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் _______ அல்லது _____ என விவரிக்கப்பட்டுள்ளனர்.
**[விடை: பூமி புத்திரர், வேளாளர்]**

**8.** பாண்டியர்களின் தலைநகரம் ___________ ஆகும். **[விடை: மதுரை]**

**9.** வெனிஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணி ________. **[விடை: மார்க்கோபோலோ]**

**10.** ___________ நூற்றாண்டில் பாண்டியர் மட்டுமே எழுச்சிபெற்ற தமிழ் வம்சமாக விளங்கினர்.
**[விடை: பதிமூன்றாம்]**

## III. பொருத்துக.

**1.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. எண்ணாயிரம் | - | i. சோழர்கால கோவில் |
| 2. நம்பியாண்டார் நம்பி | - | ii. வேதக் கல்லூரி |
| 3. கங்கைகொண்ட சோழபுரம் | - | iii. சமண, சமய நிறுவனங்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் |
| 4. பள்ளிச்சந்தம் | - | iv. வேளாளர் |
| 5. வேளாண்வகை | - | v. திருமுறைகள் |

**[விடை: 1-ii, 2-v, 3-i, 4-iii, 5-iv]**

**2.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. கங்கைக் கொண்டான் | - | i. கர்நாடகம் |
| 2. முதலாம் ராஜராஜன் மகள் | - | ii. காஞ்சிபுரம் |
| 3. உத்திரமேரூர் | - | iii. முதலாம் ராஜேந்திரன் |
| 4. காணிக்கடன் | - | iv. குந்தவை |
| 5. ஐகோல் | - | v. நிலவரி |

**[விடை: 1-iii, 2-iv, 3-ii, 4-v, 5-i]**

## IV. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து பொருத்தமான விடையை (✓) செய்க.

**1. பிற்கால பாண்டியர்கள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?**

1. பாண்டிய நாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன.
2. பாண்டிய மன்னர்கள் அதிக எண்ணிக்கையில் நீர் ஆதாரங்களை உருவாக்கினர்.
3. பாண்டியர்களால் கட்டப்பட்ட கோவில் தாராசுரத்தில் உள்ளது.
4. குதிரை வணிகத்தில் பாண்டியர்கள் சிறந்து விளங்கினர்.

அ) 1,2 மற்றும் 3 ஆ) 2,3 மற்றும் 4
இ) 1,2 மற்றும் 4 ஈ) 1,3 மற்றும் 4 **[விடை: இ) 1,2 மற்றும் 4]**

**2. சடையவர்மன் சுந்தரபாண்டியன் பற்றி கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?**

1. இரண்டாம் பாண்டியப் பேரரசின் புகழ்பெற்ற அரசர் சடையவர்மன்.
2. இவருக்கு மற்றொரு பெயர் ஜடா வர்மன்.
3. இவர் சோமேஸ்வரனைக் கண்ணனூர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தார்.
4. இவருடைய ஆட்சி ஆந்திர மாநிலம் நெல்லூர் வரை பரவி இருந்தது.

அ) 1 மற்றும் 2 ஆ) 3 மற்றும் 4
இ) 1,2 மற்றும் 4 ஈ) இவை அனைத்தும் **[விடை: ஈ) இவை அனைத்தும்]**

**3. கூற்று : சோழர்கள் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.**

**காரணம் : கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட பதினாறு மைல் நீளம் கொண்ட ஏரிக்கரைத் தடுப்பணை மிகவும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்றும் காரணமும் தவறு

**[விடை: அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

## V. குறுகிய விடையளிக்கவும்.

**1. அரிகேசரி மாறவர்மன் குறிப்பு வரைக.**

விடை:1. அரிகேசரி மாறவர்மன் என்னும் வலிமை மிக்க முதல் பாண்டிய அரசர் கி.பி. 642இல் அரியணை ஏறினார்.

2. கல்வெட்டுகளும் செப்பு பட்டயங்களும் தனது எதிரியான சேரர், சோழர், பல்லவர், சிங்களர் ஆகியோரை அவர் வெற்றி கொண்டதைப் புகழ் பாடுகின்றன.

3. அரிகேசரி மாறவர்மன் சமணர்களைத் துன்புறுத்திய கூன் பாண்டியனே என அடையாளப் படுத்தப்படுகிறார்.

**2. மார்க்கோபோலோ பாண்டிய அரசைப் பற்றி கூறியது யாது?**

விடை:1. பாண்டிய அரசு செல்வச் செழிப்பு மிக்க உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும் என மார்க்கோ போலோ புகழாரம் சூட்டுகிறார்.

2. இலங்கையோடு சேர்ந்து உலகத்தில் காணப்படும் பெரும்பாலான மாணிக்கக் கற்களையும் முத்துக்களையும் உற்பத்தி செய்கிறது என மேலும் கூறுகிறார்.

3. தன்னுடைய பயணக் குறிப்புகளில் சதி (உடன்கட்டை ஏறுதல்) நிகழ்வுகளையும் அவர்களின் பலதாரமணத்தையும் பதிவு செய்துள்ளார்.

**3. சடையவர்மன் சுந்தரபாண்டியன் குறிப்பு வரைக.**

**விடை:** இரண்டாம் பாண்டியப் பேரரசின் புகழ்பெற்ற அரசர் சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆவார். ஒட்டுமொத்த தமிழகத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்த அவருடைய ஆட்சி ஆந்திர மாநிலம் நெல்லூர் வரை பரவியிருந்தது.

**4. பாண்டிய நாட்டின் நிர்வாகப் பிரிவுகளைப் பற்றி கூறுக.**

**விடை:**
1. சோழ நாட்டில் இருந்ததைப் போலவே பாண்டிய நாடு பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்தன. மண்டலங்கள் வளநாடுகள் என அழைக்கப்பட்டன.
2. வளநாடுகள் பல நாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டன. நாடுகளை நிர்வகித்தவர்கள் நாட்டார் ஆவார்.
3. நாடுகளும் கூற்றங்களும் மங்கலம், நகரம், ஊர், குடி எனும் குடியிருப்புக்களைக் கொண்டு இருந்தன. அவற்றில் பல்வகைப்பட்ட சமூக குழுக்களைச் சேர்ந்த மக்கள் வசித்தனர்.

**5. பாண்டியர்களின் குதிரை வணிகம் குறித்து வாசப் என்பவர் கூறியது என்ன?**

**விடை:**
1. விரிவான அளவில் இக்காலத்தில் நடைபெற்ற குதிரை வணிகம் குறித்து வாசப் என்பவர் பதிவு செய்துள்ளார். 10,000க்கும் மேற்பட்ட குதிரைகள் காயலிலும் ஏனைய இந்தியத் துறைமுகங்களிலும் இறக்குமதியாயின.
2. அவற்றில் 1400 குதிரைகள் ஜமாலுதீன் பொறுப்பில் இனப்பெருக்கம் செய்து வளர்த்து வந்த குதிரைகளாகும். ஒவ்வொரு குதிரையின் சராசரி விலை சொக்கத் தங்கத்திலான 200 தினார்களாகும் என அவர் எழுதியுள்ளார்.

**6. பாண்டிய அரசின் தலைசிறந்த அரசர்கள் யார்?**

**விடை:** பாண்டிய அரசின் தலைசிறந்த அரசர்கள் சடையவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன் ஆகியோர் ஆவார்.

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. பாண்டிய மன்னர்களின் கிராம நிர்வாகம் மற்றும் நீர்பாசனம் பற்றி விரிவாக எழுதவும்.**

**விடை: கிராம நிர்வாகம் :**
1. திருநெல்வேலி மாவட்டம் மானூர் என்னும் ஊரில் உள்ள கி.பி.(பொ.ஆ) 800ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு கிராம நிர்வாகம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது.
2. கிராம மன்றங்களையும் பல்வேறு குழுக்களையும் கொண்டிருந்த சோழர்களின் உள்ளாட்சித்துறை போலவே நிர்வாகம் காணப்படுகிறது.
3. சிவில், இராணுவ அதிகாரங்கள் ஆகிய இரண்டும் ஒரே நபரிடம் வழங்கப்பட்டிருந்தன.

**நீர்ப்பாசனம் :**
1. பாண்டிய மன்னர்கள் அதிக எண்ணிக்கையில் நீர் ஆதாரங்களை உருவாக்கினர்.
2. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் நீர்நிலைகளுக்கு நீர்கொண்டு செல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன.
3. தென் தமிழகத்தில் சோழர்களைப் போலவே பாண்டியர்களும் புதிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தனர்.
4. நீர்ப்பாசனப் பணிகள் உள்ளாட்சி அமைப்புகளாலும் அதிகாரிகள் மற்றும் உள்ளூர்த் தலைவர்களாலும் மேற்கொள்ளப்பட்டன.
5. பழுது நீக்கும் பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன. சில சமயங்களில் நீர்ப்பாசன ஏரிகளை வணிகர்கள் வெட்டிக்கொடுத்து உள்ளனர்.

**2. பாண்டிய மன்னர்களின் வணிகம் பற்றி குறிப்பு எழுதுக.**

**விடை:** 1. ஏழாம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உருவாகியிருந்த அராபிய வணிகர்களின் குடியிருப்புகள் அவர்களின் வணிக உறவுகள் கிழக்குக் கடற்கரைக்கு விரிவடைய வழிவகுத்தன.

2. கிழக்குக் கடற்கரையில் இருந்த அரசுகள் அயல்நாட்டு வணிகர்களைப் பொறுத்தமட்டில் மிக தாராளமான அறிவுபூர்வமான கொள்கையைப் பின்பற்றின.
3. அவற்றின் பட்டயச் சட்டங்கள் வணிகர்களுக்குப் பல துறைமுக வரிகளிலிருந்தும், சுங்க வரிகளிலிருந்தும் விலக்கு அளித்தன.
4. காயல் துறைமுகத்தில் மாலிக் உல் இஸ்லாம் ஜமாலுதீன் எனும் அராபிய வணிகரின் வணிக நிறுவனம் செயல்பட்டது. பாண்டிய அரசர்களுக்குக் குதிரைகள் எளிதாக கிடைப்பதற்கான வசதிகளை இந்நிறுவனம் செய்து கொடுத்தது.
5. 13,14 நூற்றாண்டுகளில் குதிரை வணிகம் மேலும் அதிகரித்தது. சம்பிரதாய விழாக்களுக்கும் போர் புரிவதற்கும் குதிரைகள் தேவைபட்டதால் அரசர்கள் குதிரைகளுக்காக முதலீடு செய்தனர் என்று மார்க்கோபோலோவும், வாசப்பும் குறிப்பிட்டு உள்ளனர்.
6. குதிரை வணிகத்தில் ஈடுபட்டவர்கள் குதிரைச் செட்டிகள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் கடல்சார் வணிகத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.
7. பாண்டியர்களின் துறைமுகங்களில் மிகவும் விறுவிறுப்பாக வணிகம் நடைபெற்ற துறைமுகம் கிழக்கு கடற்கரையிலிருந்த காயல் பட்டினமாகும்.
8. வணிகப் பரிமாற்றங்கள் தங்க நாணயங்கள் மூலம் நடைபெற்றதால் அதிக அளவில் புழக்கத்திலிருந்தன.
9. அவை காசு, கழஞ்சு, பொன் எனப் பலவாறு அழைக்கப்பட்டன.

☆ ☆ ☆

# அலகுத் தேர்வு

நேரம் : 45 நிமிடங்கள் — மதிப்பெண் : 25

**I சரியான விடையைத் தேர்வு செய்க.** (3 × 1 = 3)

**1. சோழர்களின் கட்டடக்கலைக்கான எடுத்துக்காட்டை எங்குக் காணலாம்?**

அ) கண்ணாயிரம் ஆ) உறையூர் இ) காஞ்சிபுரம் ஈ) தஞ்சாவூர்

**2. பிற்கால சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தவர் யார்?**

அ) விஜயாலயன் ஆ) முதலாம் ராஜராஜன்
இ) முதலாம் ராஜேந்திரன் ஈ) அதிராஜேந்திரன்

**3. கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச் சிறிய அலகு எது?**

அ) மண்டலம் ஆ) நாடு இ) கூற்றம் ஈ) ஊர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

1. ________ தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மாணித்தார்.
2. ___________ பொறிப்புகள் கிராம நிர்வாகம் குறித்த விவரங்களை வழங்குகின்றன.
3. பாண்டியர்களின் தலைநகரம் ___________ ஆகும்.

**III. பொருத்துக.** **(4 × 1 = 4)**

**1.**

| | | | |
|---|---|---|---|
| 1. கங்கைக் கொண்டான் | - | i. | கர்நாடகம் |
| 2. முதலாம் ராஜராஜன் மகள் | - | ii. | காஞ்சிபுரம் |
| 3. உத்திரமேரூர் | - | iii. | முதலாம் ராஜேந்திரன் |
| 4. ஜகோல் | - | iv. | குந்தவை |

**IV. சரியா? தவறா?** **(2 × 1 = 2)**

**1.** முதலாம் குலோத்துங்கன் சாளுக்கிய - சோழ அரச வம்சத்தைச் சேர்ந்தவர்.
**2.** சோழ அரசு வைகையின் கழிமுகப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.

**V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.** **(2 × 1 = 2)**

**1. கீழ்க்காணும் நிர்வாகப் பிரிவுகளை இறங்குவரிசையில் வரிசைப்படுத்தவும்.**

(i) நாடு (ii) மண்டலம் (iii) ஊர் (iv) கூற்றம்

**2. கூற்று : யுவராஜாக்கள் மாநிலங்களின் ஆளுநர்களாகப் பணியமர்த்தப்பட்டனர்.**
**காரணம் : நிர்வாகத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.**

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே. ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்றும் காரணமும் தவறு.

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.** **(3 × 2 = 6)**

**1.** சதுர்வேதி மங்கலம்' என எது அழைக்கப்பட்டது?
**2.** சடையவர்மன் சுந்தரபாண்டியன் குறிப்பு வரைக.
**3.** 'காணிக்கடன்' பற்றி எழுதுக.

**VII. விரிவாக விடையளிக்கவும் :** **(1 × 5 = 5)**

**1.** சோழர்களின் ஆட்சித்திறம் பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை விவரித்து எழுதவும்.

## விடைகள்

I) 1. ஈ) தஞ்சாவூர் 2. அ) விஜயாலயன் 3. ஈ) ஊர்
II) 1. முதலாம் ராஜராஜன் 2. உத்திரமேரூர் 3. மதுரை
III) 1. 1-iii, 2-iv, 3-ii, 4-i
IV) 1. சரி 2. தவறு
V) 1. i. மண்டலம், ii. நாடு, iii. கூற்றம், iv. ஊர்
2. அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
VI) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 2
2. பார்க்க சுராவின் கையேடு கூடுதல் வினா V - 3
3. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VI - 3
VII) 1. பார்க்க சுராவின் கையேடு புத்தக வினா VII - 1

☆ ☆ ☆

அலகு 4

# டெல்லி சுல்தானியம்

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**1. ____________ மாம்லுக் அரச வம்சத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.**

அ) முகமதுகோரி ஆ) ஜலாலுதீன் இ) குத்புதீன் ஐபக் ஈ) இல்துமிஷ்

**[விடை: இ) குத்புதீன் ஐபக்]**

**2. குத்புதீன் தனது தலைநகரை ____________ லிருந்து டெல்லிக்கு மாற்றினார்.**

அ) லாகூர் ஆ) புனே இ) தௌலதாபாத் ஈ) ஆக்ரா **[விடை: அ) லாகூர்]**

**3. ____________ குதுப்மினாரின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்தார்.**

அ) ரஸ்ஸியா ஆ) குத்புதீன் ஐபக் இ) இல்துமிஷ் ஈ) பால்பன்

**[விடை: இ) இல்துமிஷ்]**

**4. டெல்லிக்கு அருகே துக்ளகாபாத் நகருக்கான அடிக்கல்லை நாட்டியவர் ____________ ஆவார்.**

அ) முகமதுபின் துக்ளக் ஆ) பிரோஷ் ஷா துக்ளக்

இ) ஜலாலுதீன் ஈ) கியாசுதீன் **[விடை: ஈ) கியாசுதீன்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. துக்ளக் அரசவம்சத்தைத் தோற்றுவித்தவர் ____________ ஆவார். **[விடை: கியாசுதீன் துக்ளக்]**
2. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து ____________க்கு மாற்றினார். **[விடை: தேவகிரி]**
3. புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர் அமிர் குஸ்ருவை ________ ஆதரித்தார். **[விடை: பால்பன்]**
4. டெல்லியிலுள்ள குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதியை ________ கட்டினார். **[விடை: குத்புதின் ஐபக்]**
5. இந்தியாவிற்கு செங்கிஸ்கான் தலைமையிலான மங்கோலியரின் அச்சுறுத்தல் ____________ ஆட்சியின் போது ஏற்பட்டது. **[விடை: இல்துமிஷ்]**

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | துக்ரில்கான் | காராவின் ஆளுநர் |
| 2. | அலாவுதீன் | ஜலாலுதீன் யாகுத் |
| 3. | பகலூல் லோடி | வங்காள ஆளுநர் |
| 4. | ரஸ்ஸியா | சிர்கந்தின் ஆளுநர் |

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. | துக்ரில்கான் | வங்காள ஆளுநர் |
| 2. | அலாவுதீன் | காராவின் ஆளுநர் |
| 3. | பகலூல் லோடி | சிர்கந்தின் ஆளுநர் |
| 4. | ரஸ்ஸியா | ஜலாலுதீன் யாகுத் |

**IV. சரியா? தவறா?**

1. குத்புதீன் இனங்காண முடியாத காய்ச்சலால் மரணமடைந்தார். **[விடை: தவறு]**
2. ரஸ்ஸியா திறமை மிக்க, மனவலிமை கொண்ட போர்வீரர். **[விடை: சரி]**
3. ஐபக்கின் மறைவுக்குப் பின்னர் அவருடைய மகன் இல்துமிஷைத் துருக்கியப் பிரபுக்கள் சுல்தானாகத் தேர்வு செய்தனர். **[விடை: தவறு]**
4. தக்காண விசயங்களில் தலையிடக்கோரி பாமினி இளவரசர் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள பிரோஷ் ஷா மறுத்துவிட்டார். **[விடை: சரி]**

**V. கூற்றைக் காரணத்தோடு ஒப்பிடுக. சரியான விடையை (✓) டிக் செய்யவும்.**

**1. கூற்று : மங்கோலியருடன் பால்பன் சுமூகமான உறவை மேற்கொண்டார்.**
**காரணம் : செங்கிஸ்கானின் பேரனான மங்கோலிய அரசன், சட்லஜ் நதியைக் கடந்து மங்கோலியர் படையெடுத்து வரமாட்டார்கள், என உறுதி கூறியிருந்தார்.**

அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே. ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
இ) காரணமும் கூற்றும் தவறானவை. ஈ) கூற்று தவறு; காரணம் சரி

**[விடை: அ) காரணம் கூற்றிக்கான சரியான விளக்கமே]**

**2. சரியான இணையைத் தேர்வு செய்க.**

அ. ஹொய்சாளர் – தேவகிரி
ஆ. யாதவர் – துவாரசமுத்திரம்
இ. காகதியர் – வாராங்கல்
ஈ. பல்லவர் – மதுரை

**[விடை: இ) காகதியர் - வாராங்கல்]**

**3. தவறான கூற்றினை கண்டறியவும்.**

அ. 1206இல் கோரி முகமதுவின் மரணத்திற்குப் பின்னர், அவருடைய அடிமையான குத்புதீன் ஐபக், இந்தியாவிலிருந்த துருக்கியப் பகுதிகளுக்குத் தன்னை அரசனாக அறிவித்துக்கொண்டார்.
ஆ. ரஸ்ஸியா, தனது ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வோரைப் பற்றியும் இடையூறு ஏற்படுத்துவோர் பற்றியும் செய்திகள் சேகரிக்க ஒற்றர்கள் துறையொன்றை நிறுவினார்.
இ. மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தனது நாட்டைப் பாதுகாக்கப் பால்பன் கோட்டைகளைக் கட்டினார்
ஈ. இப்ராகிம் லோடி 1526இல் பாபரால் தோற்கடிக்கப்பட்டார்.

**[விடை: ஆ) ரஸ்ஸியா தனது ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வோரைப் பற்றியும் இடையூறு ஏற்படுத்துவோர் பற்றியும் செய்திகள் சேகரிக்க ஒற்றர்கள் துறையொன்றை நிறுவினார்]**

**VI. கீழ்க்காண்பனவற்றிற்கு ஓரிரு வாக்கியங்களில் விடைளிக்கவும்.**

**1. முறையான ஊதியத்திற்கு மாற்றாக ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் பெயரென்ன?** ⊗

**விடை:** இக்தா என்பது முறையான ஊதியத்திற்கு மாற்றாக ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலமாகும்.

**2. ஆக்ரா நகரை நிர்மாணித்தவர் யார்?**

**விடை:** ஆக்ரா நகரை நிர்மாணித்தவர் சிக்கந்தர் லோடி.

**3. கி.பி.(பொ.ஆ)12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவியர் யார்?**

**விடை:** கி.பி.(பொ.ஆ) 12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவியவர் முகமது கோரி.

**4. 'சகல்கானி' குறித்து சிறுகுறிப்பு வரைக.**

**விடை:** மங்கோலியர்கள் தாக்குதல் மேற்கொண்டால் அதை எதிர்கொள்வதற்காகத் துருக்கியில் பிரபுக்கள் நாற்பது பேரைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார். அக்குழு 'சகல்கானி' அல்லது 'நாற்பதின்மர்' என அறியப்பட்டது.

**5. அலாவுதீன் கில்ஜி எவ்வாறு டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்தார்?**

**விடை:** அலாவுதீன் டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்து உறுதிப்படுத்தினார். பஞ்சாபில் மங்கோலியர்களுக்கு எதிராக ராஜஸ்தானத்திற்கும் குஜராத்திற்கும் எதிராக என அவருடைய படையெடுப்புகள் மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

**6. பிரோஷ் ஷா துக்ளக்கின் சாதனைகளைப் பட்டியலிடுக.**

**விடை:**
1. ஏழை முஸ்லீம்களுக்கு உதவுவதற்கான அறக்கட்டளைகளை நிறுவினார்.
2. கல்லூரிகள், மருத்துவமனைகள், மசூதிகள் ஆகியவற்றைக் கட்டினார்.
3. கொடூரமான தண்டனைகளை ஒழித்தார்.
4. இஸ்லாமியச் சட்டங்கள் அங்கீகரிக்கப்படாத வரிகளை ரத்து செய்தார்.
5. விவசாய கடன்கள் ரத்து செய்யப்பட்டது.
6. பல நீர்ப்பாசனக் கால்வாய்கள் வெட்டினார்.
7. 200 புதிய தோட்டங்களை உருவாக்கினார், 30 பழைய தோட்டங்களை புனரமைத்தார்.
8. பிரோஷாபாத், ஜான்பூர், ஹிசார், பிரோஷ்பூர் ஆகிய புதிய நகரங்களை அவர் நிர்மானித்தார்.

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்.

**1. 1398ஆம் ஆண்டில் நடைபெற்ற தைமூரின் படையெடுப்பை விவரி.**

**விடை: தைமூர் படையெடுப்பு (1398) :**

1. 'தாமர்லைன்' என்று அழைக்கப்பட்ட தைமூர் டெல்லியைத் தாக்கிச் சூறையாடி மாபெரும் மனிதப் படுகொலையை அரங்கேற்றினார்.
2. மத்திய ஆசியாவில் சாமர்கண்ட் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்த தைமூர் வட இந்தியாவிற்கு மேற்கில் சில இடங்களைக் கைப்பற்றினார்.
3. இந்தியாவின் வலிமையின்மையைச் சாதகமாக்கிக் கொண்டு இந்தியாவிற்குள் படையெடுத்து நுழைந்து 1398 டிசம்பர் மாதத்தில் டெல்லியைக் கொள்ளையடித்தார்.
4. தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்து அதிகம் பாதிப்புக்கு உள்ளான பகுதி பஞ்சாப் ஆகும்.
5. தங்கம், வெள்ளி நகைகள் எனப் பெரும் செல்வத்தைக் கொள்ளையடித்து எடுத்துச் சென்றார்.
6. மேலும் தைமூர் செல்லும்போது சாமர்கண்டில் நினைவுச் சின்னங்களைக் கட்டுவதற்காகத் தச்சுவேலை செய்வோர் கட்டடக்கலைஞர்கள் போன்ற இந்தியக் கைவினைஞர்களையும் உடன் அழைத்துச் சென்றார்.

## VIII. உயர் சிந்தனை வினா.


**1. முகமதுபின் துக்ளக்கை டெல்லியின் சுல்தானாக நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

விடை:
1. கியாசுதீன் துக்ளக்கின் மூத்த மகனான இவர் ஆப்கானிஸ்தானத்தை சேர்ந்த துருக்கிய இன மரபினராவார். இவரது தந்தையின் மறைவிற்கு பிறகு தில்லி சுல்தானத்தின் 1325இல் மன்னரானார்.
2. முகமது துக்ளக் தத்துவம், கணிதம், வானவியல் மற்றும் இயற்பியல் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தார். அது மட்டுமல்லாது மருத்துவத்திலும் தத்துவவாதம் செய்வதிலும் திறன் கொண்டிருந்தார்.
3. இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். பாரசீகம், அரபு, துருக்கி மற்றும் சமஸ்கிருதம் போன்ற பல மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.
4. மொரோக்கோ நாட்டு பயணியான இபன் பதூதா இவரது ஆட்சி காலத்தில் இந்தியாவிற்கு வந்து இவரது ஆட்சி பற்றிய குறிப்புகளை பதிவு செய்துள்ளார். துக்ளக் தனது நிருவாகத்தில் பல புதுமைகளைப் புகுத்தினாலும் அவை தோல்வியடைந்தன.

## IX. வரைபட வினா,

**1. இந்திய ஆறுகள் வரைபடத்தில் துக்ளக் வம்சத்தின் ஆட்சி எல்லையையும் கீழ்க்காணும் பகுதிகளையும் குறிப்பிடுக.**

விடை: 1. டெல்லி 2. தேவகிரி 3. லாகூர் 4. மதுரை



**X. மாணவர் செயல்பாடு :**

**1. பொருத்துக.**

| | தந்தை | மகன் |
|---|---|---|
| 1. | குத்புதீன் ஐபக் | ருக்குதீன் பிரோஷ் |
| 2. | இல்துமிஷ் | கைகுபாத் |
| 3. | பால்பன் | அலாவுதீன் |
| 4. | கியாசுதீன் | சிக்கந்தர் லோடி |
| 5. | பகலூல் லோடி | ஆரம் ஷா |

**விடை :**

| | தந்தை | மகன் |
|---|---|---|
| 1. | குத்புதீன் ஐபக் | ஆரம் ஷா |
| 2. | இல்துமிஷ் | ருக்குதீன் பிரோஷ் |
| 3. | பால்பன் | கைகுபாத் |
| 4. | கியாசுதீன் | அலாவுதீன் |
| 5. | பகலூல் லோடி | சிக்கந்தர் லோடி |

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. அடிமை வம்சத்தினர் இத்துணைக்கண்டத்தை ________ ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.**
அ) 84 ஆ) 80 இ) 74 ஈ) 72 **[விடை: அ) 84]**

**2. கியாசுதீன் துக்ளக் டெல்லிக்கு அருகே ________ புதிய நகரை நிர்மானம் செய்ய அடிக்கல் நாட்டினார்**
அ) பஞ்சாப் ஆ) துக்ளகாபாத் இ) தௌலதாபாத் ஈ) அகமதாபாத்
**[விடை: ஆ) துக்ளகாபாத்]**

**3. முகமது பின் துக்ளக் ________ நாணயங்களை அடையாளப் பணமாக வெளியிட்டார்.**
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செப்பு ஈ) தங்கம் **[விடை: இ) செப்பு]**

**4. கி.பி. 1334இல் ________ தனி சுல்தானியமாக உருவானது.**
அ) திருச்சி ஆ) தூத்துக்குடி இ) சேலம் ஈ) மதுரை **[விடை: ஈ) மதுரை]**

**5. 1388 இல் தனது 83ஆவது வயதில் ________ இயற்கை எய்தினார்.**
அ) பிரோஷ் ஷா துக்ளக் ஆ) முகமது பின் துக்ளக்
இ கியாசுதீன் பால்பன் ஈ) சையது லோடி **[விடை: அ) பிரோஷ் ஷா துக்ளக்]**

**6. கிசிர்கான் ________ வம்சத்தைத் தோற்றுவித்தவர் ஆவார்.**
அ) லோடி அரச ஆ) சையது அரச இ) தைமூர் ஈ) துக்ளக் அரச
**[விடை: ஆ) சையது அரச]**

**7. கில்ஜி அரச வம்சத்தை நிறுவியவர்________.**
அ) அலாவுதீன் கில்ஜி ஆ) ஜலாலுதீன் கில்ஜி
இ) மாலிக் கபூர் ஈ) கியாசுதீன் **[விடை: ஆ) ஜலாலுதீன் கில்ஜி]**

**8. தைமூரால் டெல்லி கொள்ளையடிக்கப்பட்ட வருடம் ________ .**
அ) 1398 ஆ) 1598 இ) 1498 ஈ) 1698 **[விடை: அ) 1398]**

**9. முதலாம் பானிபட் போர் நடைபெற்ற வருடம்________ .**
அ) 1324 ஆ) 1526 இ) 1246 ஈ) 1528 **[விடை: ஆ) 1526]**

**10. ________ கட்டடம் இந்தோ சாராசானிக் கலைவடிவம் ஆகும்.**
அ) குதுப்மினார் ஆ) சித்தூர் கோட்டை இ) ஜெய்பூர் ஈ) வாரங்கல்
**[விடை: அ) குதுப்மினார்]**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி ____________ ஆல் நிறுவப்பட்டது. **[விடை: முகமது கோரி]**
2. இல்துமிஷின் மகளான _________ மிகச்சிறந்த நிர்வாகி ஆவார். **[விடை: ரஸ்ஸியா சுல்தான்]**
3. _________ லோடி வம்ச ஆட்சியைத் தோற்றுவித்தார். **[விடை: பகலூல் லோடி]**
4. முகமது பின் துக்ளக் சுல்தானாக ________ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். **[விடை: இருபத்தைந்து]**
5. _________ மொராக்கோ நாட்டுப் பயணி ஆவார். **[விடை: இபன் பதூதா]**
6. காராவின் ஆளுநர் _________ ஆவார். **[விடை: அலாவுதீன் கில்ஜி]**

7. 1296இல் அலாவுதீன் கில்ஜி தன்னை ___________ யின் சுல்தான் ஆக அறிவித்துக் கொண்டார். **[விடை: டெல்லி]**

8. பாரசீகத்தை சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர் ___________. **[விடை: அமிர்தகுஸ்ரு]**

9. _____ விளையாட்டின்போது குதிரையில் இருந்து தவறி விழுந்து ஐபக் 1210இல் மரணம் அடைந்தார். **[விடை: போலோ]**

10. குத்புதீன் ஐபக்கின் மகன் ___________ திறமையற்றவராக இருந்தார். **[விடை: ஆரம் ஷா]**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | வட இந்தியா | i. | சடங்கு |
| 2. | பீகார், வங்காளம் | ii. | நாற்பதின்மார் |
| 3. | சகல்கானி | iii. | சிந்து-கங்கைச் சமவெளி |
| 4. | ஜவ்ஹர் | iv. | கீழை கங்கைச் சமவெளி |
| 5. | சிர்ஹிந்த் | v. | பஞ்சாப் |

**[விடை: 1-iii, 2-iv, 3-ii, 4-i, 5-v]**

## IV. சரியா? தவறா?

1. குத்புதீன் ஐபக் அடிமை வம்ச ஆட்சியை நிறுவினார். **[விடை: சரி]**
2. பிரோஷ் ஷா துக்ளக் மக்களின் வாழ்க்கையில் அக்கறை இல்லாதவர். **[விடை: தவறு]**
3. சிர்ஹிந்தின் ஆளுநரான பகலூல் லோடி டெல்லியில் சையது வம்சத்தை நிறுவினார். **[விடை: தவறு]**
4. தைமூர் தாமர்லைன் என்றும் அழைக்கப்பட்டார். **[விடை: சரி]**
5. அவுத் சிந்து, முல்தான் ஆகிய மாகாணங்களின் ஆளுநர்கள் சுல்தானுக்கு எதிராக கிளர்ச்சி செய்து சுதந்திர அரசுகள் ஆக பிரகடணம் செய்து கொண்டார். **[விடை: சரி]**

## V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து பொருத்தமான விடையை (✓) செய்க.

1. **கூற்று : பிரோஷ் ஷா துக்ளக் சுல்தானியத்தைக் கட்டிக்காக்க அமைதியான முறையில் பல முயற்சிகளை மேற்கொண்டார்.**

**காரணம் : அவர் கிளர்ச்சிகளை அடக்கவும், மாகாணங்களை மீட்கவும், தக்காணப் பிரச்சினைகளை தலையிட மறுத்துவிட்டார்.**

அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் தவறு
இ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
ஈ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

**[விடை: ஈ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

2. **சரியான இணையைத் தேர்வு செய்க.**

1. பால்பன் கல்லறை – இந்தோ சாராசானிக் கலைவடிவம்
2. தைமூர் – சிர்ஹிந்த்
3. சிக்கந்தர் லோடி – முகலாயப் பேரரசு
4. தௌலாதாபாத் – அலாவுதீன் கில்ஜி

**[விடை: 1) பால்பன் கல்லறை – இந்தோ சாராசானிக் கலைவடிவம்]**

## VI. குறுகிய விடையளிக்கவும்.

1. **குதுப்மினார் யாரால் தொடங்கப்பட்டது? அதை கட்டி முடித்தவர் யார்?**

விடை: குத்புதீன் ஐபக் குதுப்மினாருக்கு அடிக்கல் நாட்டினார். ஆனால் அவரால் அப்பணிகளை முடிக்க இயலாமல் போயிற்று. அவருடைய மருமகனும் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற இல்துமிஷ் குதுப்பினாரைக் கட்டி முடித்தார்.

2. **அடிமை வம்சத்தைச் சேர்ந்த மூன்று மாபெரும் சுல்தான்கள் யாவர்?**

விடை: (i) குத்புதீன் ஐபக் (ii) சம்சுதீன் இல்துமிஷ் (iii) கியாசுதீன் பால்பன் ஆவார்.